பக்கங்கள்-16 | 26.கார்த்திகை.2023 | விலை-50.00






# தினப்புயல்

PTN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 422




## வரவுசெலவுத்திட்டம் 2024 : மீண்டும் ராஜபக்ஷக்களை நம்பி ஏமாற்றமடைய சிங்கள மக்கள் தயார் இல்லை - சுரேஸ் பிரேமச்சந்திரன்




## தமிழரசுக்கட்சி எதை நோக்கி பயணிக்கிறது - திருமலை நவம்





## பக்கச்சார்பற்ற விசாரணையே தேவை!

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# வரவுசெலவுத்திட்டம் நாட்டு மக்களுக்குப் பயன் இல்லை - மீண்டும் ராஜபக்ஷக்களை நம்பி ஏமாற்றமடைய சிங்கள மக்கள் தயாராக இல்லை

## ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



**கேள்வி : 2024ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் பாராளுமன்றத்திலே ஜனாதிபதியும், நிதியமைச்சருமாகிய ரணில் விக்கிரமசிங்க அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : 2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் ஜனாதிபதி ரணில் முன்மொழிந்திருக்கின்ற ஒரு வரவுசெலவுத்திட்டம். இதில் முக்கியமாக எதிர்வரும் ஆண்டு ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் காலம் என்பதை ஜனாதிபதியே அறிவித்திருக்கின்றார். அது மாத்திரமல்லாமல் பத்திரிகை யாளர்களைச் சந்தித்தபொழுது அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றிபெறும் என்றும் கூறியிருக்கின்றார். ஆகவே முதலாவது விடயமாக இது தேர்தலை நோக்கிய வரவுசெலவுத்திட்டமாகப் பேசப்படுகின்றது. முக்கியமாக அரச ஊழியர்களுக்கான பத்தாயிரம் ரூபாய் என்கிற வேதன அதிகரிப்பானது அடுத்த வருட ஏப்ரல் மாதத்திலிருந்து என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அடுத்த வருட ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் தேர்தல் நடைபெறக்கூடும் என்று நாங்கள் கருதுகிறோம். அதேபோல் ஓய்வூதியக்காரர்களுக்கும் 2500.00 ரூபாய் அதிகரிப்பு வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் வரிகள் அதிகரிக்கப்படுகின்றது. 15%மாக இருந்த வரி 18%மாக உயர்த்தப்படுகின்றது. ஒருபக்கம் வேதனத்தை உயர்த்திவிட்டு, வேதனம் கைகளுக்கு வருமுன்பாகவே வரிகள் பல மடங்கு உயர்த்தப்படுகின்றது என்பதும் இதன் காரணமாக மக்கள் மேலதிக சுமைகளைச் சுமக்கவேண்டிய ஒரு தேவையும் இருக்கின்றது.

இந்த அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் வரவுசெலவுத் திட்டம் சம்பந்தமாகவோ அல்லது நிதியைக் கையாள்வது தொடர்பிலோ சர்வதேச நாணய நிதியம் (IMF) என்ன கூறுகின்றதோ அதனைத் தான் அவர்கள் செய்துகொண்டு வருகின்றார்கள். ஆகவே இந்த அரசாங்கம் வெளியிட்டுள்ள வரவுசெலவுத்திட்டமானது தேர்தல் விடயங்களை மையப்படுத்தியே அமைந்துள்ளது. ஏறத்தாழ 2500 மில்லியன் தொகை துண்டுவிழும் தொகையாக இருக்கிறது. இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் இந்த வரவுசெலவுத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை எவ்வாறு கையாளப்போகிறார்கள். யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களது வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக வடகிழக்குக்கு என்ன செய்யப்போகின்றோம். மலையக மக்களுக்கு என்ன செய்யப்போகின்றோம். ஆனால் இவையெல்லாம் செய்யப்படுமா என்பதுதான் கேள்வி. ஆகவே மக்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்களது வாக்குகளைப் பெற்றுக்கொள்வதுதான் அவர்களது நோக்கமாக இருக்கிறது.

வடகிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மீது பாரிய கோபங்கள் அல்லது அவநம்பிக்கைகள் அவர் மீது நிறையவே இருக்கிறது. அவர் இருக்கிற காலப்பகுதியில் நூற்றுக் கணக்கான பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றது. அதற்கு அவர் மறைமுகமாக ஆதரவாளராக இருக்கின்றார். அதுமாத்திரமல்லாமல் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் பறிமுதல் செய்யப்படுகின்றது. இவை யெல்லாம் இருக்கிறபோது தமிழ் மக்கள் ரணில் மீது கோபத்திலும் இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாகத்தான் வடக்கு மாகாணத்திற்கு என்ன செய்யப்போகிறோம். கிழக்கு மாகாணத்திற்கு என்ன செய்யப்போகிறோம் என்று இவர் பட்டியலிடுவது நிச்சயமாக நடைமுறைக்கு வரப்போவது கிடையாது. தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான இந்த வரவுசெலவுத்திட்டத்திற்கூடாக நாங்கள் சாதிக்கிறோம் என்ற கருத்துக்களைக் கூற வருவதாகவே நாங்கள் பார்க்கிறோம்.

இந்த வரவுசெலவுத்திட்டம் என்பது பாரிய மாற்றங்களை இந்த மண்ணில் ஏற்படுத்தமாட்டாது. இவர்கள் தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள் எதனையும் காணாமல், நாட்டில் ஒரு அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்காமல், சர்வதேச முதலீடுகளை எதிர்பார்க்க முடியாது என்பதும். இந்த நாட்டை களமாகப் பாவிக்க விரும்புகின்ற சில சக்திகள், சீனாவோ அமெரிக்காவோ இந்தியாவோ தங்களது சொந்த தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக முதலீடுகள் இவர்களுக்கூடாக வரும். நாங்கள் நினைப்பதுபோல பாரிய முதலீடுகள், அதன் ஊடான வேலைவாய்ப்புக்கள் இதன் ஊடாக மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்குவதற்கு இந்த வரவுசெலவுத்திட்டத்தில் எதுவுமே கிடையாது.

ஆகவே இந்த வரவுசெலவுத்திட்டம் சிறுபான்மை தேசிய இனங்களை ஏமாற்றுவது மாத்திரமல்லாமல், ஒட்டுமொத்தமாக நாட்டைப் பொறுத்தளவில் என்னைப் பொறுத்தவரையில் குறிப்பிட்டுக்கூறக்கூடிய வகையில் எதுவுமில்லை. அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு வேலைவாய்ப்புக்களை நோக்கமாகக் கொண்டு எதிர்காலத்தில் சமூகத்தில் நம்பிக்கைகளை நோக்கமாகக்கொண்டு இந்த வரவுசெலவுத்திட்டத்தில் முன்வைக் கப்பட்டிருப்பதை நான் காணவில்லை. மாறாக ஏமாற்றுத்தனமான விடயங்களே இதில் கூறப்பட்டிருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.



**கேள்வி : தேர்தல் அரசியல் எனும்போது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூட்டணி அரசியலுக்குள் இருக்கிறார். அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தென்னிலங்கை மக்கள் மத்தியில் நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுக்கும் வல்லமை படைத்த தலைவர் என்கிற நிலைப்பாடும் இருக்கிறதல்லவா?**

பதில் : இல்லை. இன்றைய தென்னிலங்கையைப் பொறுத்தளவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மூன்றாமிடத்தில் தான் இருப்பதாக அறிய முடிகிறது. அநுரகுமார திசாநாயக்கா முதலாமிடத்திலும், சஜித் பிரேமதாசா அவர்கள் இரண்டாமிடத்திலும் ஜனாதிபதி வேட்பாளர்கள் என்கிற அடிப்படையில் முன்னிலை வகிக்கின்றனர். இந்தக் கணிப்பீட்டில் பல மாற்றங்கள் எழலாம். ஆனால் ஒரு தேர்தல் வருகிறபோது ஐக்கிய தேசியக் கட்சி தனித்து நின்று போட்டி போடப்போகின்றதா? அல்லது பொதுஜன பெரமுனவுடன் இணைந்து நின்று போட்டியிடப்போகின்றதா? என பல்வேறு மாறுபட்டக் கருத்துக்கள் இருக்கின்றன.

பொதுஜன பெரமுன தாங்கள் தனித்து நின்று தேர்தலை எதிர்கொள்ளப்போகின்றோம் எனக் கூறுவது அல்லது கூட்டாக நிற்கப் போகிறோம் எனக்கூறுவது. இதைவிட எத்தனை பேர் போட்டியிடப் போகிறார்கள் என்கிற விடயமும் இருக்கிறது. சம்பிக்க ரணவக்க, டளஸ் அழகப்பெரும, சஜித் பிரேமதாசா, அநுரகுமார திசாநாயக்கா போட்டியிடப் போவதாகக் கூறுகின்றனர். இவ்வாறு இன்னும் பலர் கூறிக்கொண்டிருக்கின்றனர். இறுதி வேட்பாளர்கள் யார் என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டிய விடயம்.

நிச்சயமாக சிங்கள வாக்குகள் ஜனாதிபதித் தேர்தலில் சிதறப்படும். முன்னர் கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்ததுபோல் இனிவரும் ஜனாதிபதித் தேர்தலில் இவர்கள் தனிச் சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெற முடியாது என்பது மாத்திரம் உண்மை. தமிழ்த் தரப்பினை பொறுத்தவரை நாங்கள் அனைவரும் இணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும். நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். இனியும் ஏமாற முடியாது என்பதை இவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். பொது வேட்பாளர் தொடர்பில் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அது தொடர்பிலான பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக அது சரியாக அமைந்தால் முதலாவது எண்ணிக்கையில் 50%மான வாக்குகளை இவர்கள் யாரும் பெற முடியாத சூழல் காணப்படுகிறது.

பொருளாதார ரீதியாக நாட்டைச் சரி செய்துள்ளார் அல்லது அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். எதிர்காலத்தில் இவர் தான் இதற்குத் தீர்வாக அமைவார் என்றெல்லாம் பிரச்சாரங்களில் பேசலாமே தவிர, சிங்கள மக்கள் வாக்குகளை வழங்கி அடுத்தமுறை ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவுசெய்வார்களா? என்கிற கேள்விக்கான பதில் என்னிடம் இல்லை. உண்மையான நிலவரமும் அவ்வாறில்லை என்று தான் நான் கருதுகிறேன்.

**கேள்வி : ராஜபக்ஷக்கள் மீண்டும் இந்த நாட்டில் அதிகாரப் பலத்துடன் ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறதா?**

பதில் : என்னைப் பொறுத்தவரையில், இனிவரும் காலங்களில் அவர்களை நம்புவதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை. ஏனென்றால் தற்போது இவர்கள் பல ஆயிரம் மில்லியன்களை சுருட்டிச் சென்றது அனைவருக்கும் வெளிச்சமாகத் தெரிகிறது. இதனால் தான் இலங்கை பொருளாதார ரீதியாக அதளபாதாளம் நோக்கிச் சென்றுள்ளது என்பதை நாட்டு மக்களும் நன்கு உணர்ந்துள்ளார்கள்.

அண்மையில் உயர் நீதிமன்றமும் ராஜபக்ஷக்கள் தான் இந்த நாடு பொருளாதார ரீதியாக பின்தள்ளப்பட்டதற்கு முழுக் காரணம் என தீர்ப்பினையும் வழங்கியுள்ளது. இவர்களுடன் இணைந்து பணியாற்றிய அதிகாரிகளும் இக்குற்றங்களுக்குக் காரணம் என தீர்ப்பு வெளியாகியிருக்கின்றது. நீதிமன்றம் கூட இந்த விடயங்களைக் கூறியிருக்கின்ற சூழலில், அவர்களை இன்னுமொரு முறை நம்பி சிங்கள மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்பது எனது கணிப்பாகும்.

வாக்களிப்பார்களாகவிருந்தால் சிங்கள மக்கள் செய்கின்ற பாரிய தவறாக இருக்கும் என்று தான் நான் நம்புகின்றேன். சிங்கள மக்கள் ஒன்றும் அறியாதவர்கள் அல்ல. அவர்களும் விடயங்களை அறிந்துகொள்கிறார்கள், புரிந்துகொள்கின்றார்கள். ராஜபக்ஷ குடும்பத்தினர் இன்னுமொருமுறை நாட்டு மக்களை ஏமாற்ற சிங்கள மக்கள் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க மாட்டார்கள் என்று தான் நான் கருதுகிறேன்.

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் "மாவீரர் நாள்"

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அஹிம்சை மற்றும் ஆயுத ரீதியாக தமதுயிரை துச்சமென மதித்து இம்மண்ணுக்காகவும், தமிழினத்தின் இருப்புக்காகவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் தமது கனவுகளைக் கூட பொருட்படுத்தாமல் இம் மண்ணில் உயிர்நீத்த வீர மறவர்களை அஞ்சலி செய்யும் நாள் கார்த்திகை 27 மாவீரர் நாளாகும்.

யுத்தம் முடிவுற்று 14 வருடங்களைக் கடக்கின்றபோதிலும் தமிழ் மக்கள் சுதந்திரமாக தமக்காகப் போராடிய வீர மறவர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாத நிலையில் இன்று வரை வாழ்கின்றனர். வடக்கு மற்றும் கிழக்கில், புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்கள், தமது இரத்தத்துடன் ஒன்றித்துப்போன உறவுகளான மாவீரர்களுக்கு, உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவது கடமையாகும். அரச படைகளின் தொடர் அச்சுறுத்தல்களாலும், நீதிமன்றத் தடைகளாலும் தமிழ் மக்கள் அஞ்சலி நிகழ்வுகளைச் செய்வதில் தொடர்ச்சியாக இடையூறு ஏற்படுத்தப்படுகின்றது.

இம் மண்ணில் போர்க் குற்றங்களைச் செய்து, இன்று நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும் முழுக் காரணமானவர்கள் என நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள ராஜபக்ஷ சகோதரர்கள், தெற்கின் சிங்கள மக்களாலும் வெறுக்கப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்றில் இவர்களின் அடி வருடிகளாகச் செயற்படும் சரத் வீரசேகர போன்றவர்கள் இவர்களை இன்னமும் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். மாவீரர் நாள் நெருங்கும் சமயங்களில் புதுப்புது புரளிகளை கிளப்பிவிடுவதில் ராஜபக்சக்கள் வல்லவர்கள்.

வடக்கில் கிழக்கில் மாவீரர் நாளுக்காக துயிலுமில்லங்கள் என அடையாளப்படுத்தப்பட்டவை துப்பரவு செய்யப்பட்டு முகப்புகள் அலங்காரப் படுத்தப்பட்டுள்ளது. இதனை பயங்கரவாதம், நல்லிணக்கத்திற்கு ஆபத்து என தென்னிலங்கையில் பிரச்சாரம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அரச இயந்திரத்தின் ஒரு பகுதியாகவுள்ள இலங்கையின் முப்படையினர், போர்க் குற்றவாளிகளான சிங்களத் தரப்பினரைப் பாதுகாப்பது ஆச்சரியமல்ல. இவர்களிடம் நாம் எமக்கான நீதியினையும் எதிர்பார்க்க முடியாது.


இம்முறை மாவீரர் நாளை முன்னிட்டும் விசேடமாக வடக்கில் கிழக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகரிக்கப்பட்டுள்ளது. பொலிசார் மாவீரர் நாளை அனுஷ்டிக்கவிடாமல் தடுப்பதற்காக, நீதிமன்றத்தின் தடையுத் தரவுகளைப் பெற சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், சில முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என பலரின் பெயர்ப் பட்டியலை கைவசம் வைத்துக்கொண்டு, நீதிமன்றத்தின் உதவியினை நாடி அலைந்து திரிகின்றனர்.

இதனால் என்ன பயன்? சிங்களப் பேரினவாதத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு போயுள்ள இந்த நாடு முதலில் இனவாத சிந்தனைகளிலிருந்து வெளியில் வரவேண்டும். மாவீரர் நாளுக்கு அஞ்சலி செய்வதால் இந்த நாட்டின் நல்லிணக்கம் சீர்குலைவதில்லை. பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இந்த நாடு மீண்டெழுந்துவிடாது. இனவாத சக்திகளை முதலில் களையுங்கள். நாடு வளம்பெறும்.

# கல்லறைப் பூக்கள்



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்



22

காயா, பண்டிக்காயா, நாவல், கருங்காலி, புளி என தருக்கள் காட்சியளிக்கும். அந்த மரங்களில் தாவிச்செல்லும் குரங்குகளும் சிறியான்களும் அலம்பும் சப்தமும் உதிரியாக ஆங்காங்கு மரக்கிளைகளின் இடையே அமர்ந்திருக்கும் தேவாங்குகள் அழும் சப்தமும் இடையிடையே கேட்கின்றன.

கிளிகள் இனிமையாக பேசுவதும் குயில்கள் விட்டு விட்டு கூவுவதும் குருவிகள் பறந்து பறந்து கீச்சிடுவதும் காட்டுச்சேவல் மரத்துக்கு மரம் தாவி கத்துவதும் தேனீக்கள் பாலப் பழங்களைச் சுவைத்து இரைந்தவாறு ரீங்காரமிடுவதும் சாரைப்பாம்பும் நாகப்பாம்பும் ஒன்றாக இணைந்து விளையாடும் போது, நாகப்பாம்பு அழகாக படமெடுத்தபடி சீறுவதும் வண்டுக்கள் பட்ட மரங்களைத் துளைத்து இரைவதும் வானம்பாடி காதலைனைத் தேடி பாடுவதும் மணிப் புறாக்கள் சோடி சோடியாக புறுபுறுப்பதும் யானைகள் தலைமைத் துவத்துக்குக் கட்டுப்பட்டுப் பிளிறுவதும் மயில் தோகை விரித்து ஆடி அகவுவதும் இவற்றையெல்லாம் மிக உன்னிப்பாக கேட்டும் பார்த்தும் பயணத்தை மேற்கொள்ளும் போது, பறவைகள், விலங்குகள் சரணாலயத்தினூடாக பயணத்தை மேற்கொள்வதைப் போல ஓர் உணர்வு தோன்றும்.

பேருந்து ஓரளவு வேகமாக சென்ற போதும், வீதியில் குறுக்கறுத்து செல்லும் யானைக் கூட்டத்தினாலும் பன்றிக் கூட்டத்தினாலும் மான் கூட்டத்தினாலும் நரிக் கூட்டத்தினாலும் காட்டு எருமைக் கூட்டத்தினாலும் மரைக் கூட்டத்தினாலும் வெங்கிணாந்தி பாம்புகளாலும் பேரூந்தின் வேகம் சற்று குறைவடைந்து பயணம் சிறிது தாமதமடையும்.

வீதியின் இருமருங்கிலும் இருந்து, வரும் காட்டுப் பூக்களின் வாசனை 'கம...கம' என்று பேருந்தின் சாளரத் தினூடாகவும் வாயிலூடாகவும் உள்ளே வரும்.

தொண்ணூறு விழுக்காடு பயணிகள் இந்த இயற்கை காட்சிகளைக் காணாமல் தூங்குவதற்காக பயணம் மேற்கொள்பவர்கள் போல தூங்கி விழுந்து கொண்டிருப்பார்கள். எஞ்சிய பத்து விழுக்காடு மக்கள் இந்த காட்சிகளில் மூழ்கிப் போய் பயணத்தை மேற்கொள்வார்கள்.

யூஜீனுக்கும் அவனது தம்பிக்கும் இது பழகிப்போன காட்சி என்பதால், சிறிது கண்ணயர்ந்தார்கள். சாத்துக்கு இவை அனைத்துமே புதிதாக இருந்தன. தற்காலிகமாக போராட்ட நினைவுகளிலிருந்து விடுபட்டு, இந்த காட்சியில் இழைத்துப் போய் மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். கிட்டத்தட்ட ஒன்றரை மணித்தி யாலங்கள் இந்த காட்டு வீதி பயணம். இவ் வீதியில் வழிப்பறி கொள்ளையர்களைத் தவிர வேறு மனிதர்களின் நடமாட்டத்தைக் காண முடியாது. காட்டு வீதியைக் கடந்து பேரூந்து புன்னகையுடன் பிரதான வீதியில் ஏறியது. பேரூந்தின் சப்தம் மாறியது. கண்ணயர்ந்த பிரயாணிகள் பலர் விழிப்படைகின்றனர். பேரூந்து ஒரு சீரான கதியில் சுருதியான சப்தத்துடன், ஆடாமல் அசையாமல் பயணிக்கின்றது.

"சாத் உங்களோட கதைத்துக் கொண்டிருந்தவாக்கில், கொஞ்சம் தூங்கிட்டன். நீங்கள் முழிச்சுக் கொண்டேதான், வந்திங்க. ஒன்றுக்கும் யோசிக்காதிங்க. எல்லாம் மனிதருக்குத்தான். என்னால், முடிஞ்ச அடுக்கு ஏதாவது செய்து தாறன்"

சாத்துக்கு யூஜீனின் ஒத்துப்பாடுதல் பேச்சைக் கேட்டதும் உச்சி குளிர்வடைந்தது. யூஜீனும் அவனது தம்பியும் காதும் காதும் வைத்தவாறு, சாத்துக்கு கைகொடுப்பதற்கு வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டார்கள்.

தலைமையனதும் சாத்தினதும் நீண்ட சம்பாஷணையைக் ஆரம்பத்திலிருந்தே கேட்டுக் கொண்டிருந்த, தம்பி, யூஜீனின் விருப்பத்திற்கும் இசைவு தெரிவித்தான்.

திருக்கோணமலையும் அண்மித்துக் கொண்டிருந்தது' பயணிகள் ஒவ்வொருவராக பேரூந்தின் மணியை அடிக்க பேருந்தும் நிற்க அவர்கள் இறங்கி செல்கிறார்கள். பேருந்தின் மணி ஒலிக்கின்றது. யூஜீனின் தம்பி சதீஸ் அருகில் அமர்ந்திருந்த மெல்லிய வாடல் தோற்றத்தைக் கொண்ட வழிப்போக்கு பெண்மணி எழுந்து, "சதீஸ் 'கோல்' பண்ணுங்க. நான் போயிட்டு வாறன்" என்றவாறு இறங்கினாள்.

இப்போது இரண்டு ஆசனங்களில் தனியாக அமர்ந்திருந்த, சதீஸ் இடம் சுழியாக கால் வட்டமளவுக்குத் திரும்பி அண்ணனையும் சாத்தையும் பார்த்தான்.
"நீ திருந்தவே மட்டாயா?"
"ஏன் அண்ணாச்சி?"
"யாரோ ஒருத்திக்காக இவ்வளவு நேரமும் ஒரு வார்த்தைக் கூட கதைக்கவில்லையே"
"சும்மா போ அண்ணாச்சி அதுதான், இப்பத்தைய பொடியளிண்ட 'கெத்'. உனக்கு நாற்பது வயசுல ஒன்றுமில்லாமல் இருக்கிறாய். உனக்கு என்ன தெரியும்?"
"அடே சதீஸ் எங்களுக்கும் இரண்டு தங்கச்சிகள் இருக்கு. திரும்பவும் பொலிஷ் நிலையம், நீதிமன்றம், சிறைச்சாலை என்று என்னையையும் அம்மாவையும் அப்பாவையும் ஏறி இறங்க வைக்காட்டிச் சரி"
"இப்படியே சொல்லிச் சொல்லி என்ர திறமையெல்லாம் குட்டிச்சுவராக்கிப் போடுங்கோ"
"கண்டறியாத திறமை. மூன்று தரம் ஓயல் எடுக்கேக்க எங்கப் போச்சி திறமை மண்ணாங்கட்டி"
"அதெல்லம் கதைச்சி மானத்த வாங்காத அண்ணாச்சி. சரி சரி அதை விடு. உனக்குப் பக்கத்தில் இருக்கிறவர் என்னவாம்"
"அதுதான் தம்பி முதல்ல உனக்கிட்ட கேட்டனான். படிக்கத்தானே. நடுத்தெருவில் நிற்கிறவருக்கு உதவி செய்தால் ஒன்றும் கெட்டுப்போக மாட்டம்."

"சரி, மிஞ்சிப் போனா ஒரு கிழமை இரண்டு கிழமைதானே."

தமையனும் தம்பியும் நண்பர்கள் போல பழகுவதை எண்ணி மகிழ்வடைந்த சாத்துக்கு இருவரும் இடையே பொடி வைத்து கதைப்பது புரியாவிட்டாலும் தனக்கு கைகொடுக்கவே அந்த பேச்சு என்பதை ஊகித்துக் கொண்டான்.

"சாத் நீங்க கப்பலுக்குக் 'டிக்கட்' எடுக்கும் மட்டும் எங்கட வீட்டில் தங்கிக் கொள்ளுங்கள். அப்பா, அம்மா கிட்ட நானும் தம்பியும் கதைத்து சமாளிக்கிறம். உங்கள இப்படி விட்டுட்டுப்போக மனம் கேட்கவில்லை."

"மெத்தப் பெரிய உபகாரம். என்ர உடம்பில் உசிரு இருக்கும் மட்டும் மறக்கமாட்டன்" என்று கூறியவாறு இறும்பூது கொண்டான். அதற்கு மேல் அவனால், ஒன்றும் கதைப்பதற்கு நா எழவில்லை.

'இந்த உலகத்தில் பார்வைக்குக் கெட்ட மனிதர்களாக தெரிந்தாலும் பழகிப்பார்த்தால், அவர்கள்தான், உத்தமர்களாகத் தெரிவார்கள். இதற்கு இவர்களே எடுத்துக்காட்டுக்கள்' என பச்சாதாபத்துடன் எண்ணினான், சாத். திருக்கோணமலை நகருக்குள் பேரூந்து மெதுமெதுவாக ஆமை வேகத்தில் வாகன நெரிசலுக்குள்ளும் மக்களின் நெரிசலுக்குள்ளும் புகுந்து செல்கின்றது.

இலங்கையில் உள்ள இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றாகத் திகழும் திருக்கோணமலைத் துறைமுகம் தூரத்தே இருந்து பார்க்கும் போது கண்களைக் கொள்ளை கொள்கின்றது.

கடற்கரையில் மட்டி கிண்டுபவர்களைப் பார்க்கும் போது, ஏதோ தொலைத்து விட்டு தேடுபவர்கள் போல தேடுகின்றார்கள். திருக்கோணமலை நகரத்தின் நடுப்பகுதிக்குப் பேரூந்து வந்துவிட்டது. பேருந்தில் சாரதி, நடத்துநர், சதீஸ், யூஜீன், சாத் ஆகிய ஐந்து பேரைத் தவிர வேறு யாரும் இல்லை எல்லோரும் இறங்கிவிட்டார்கள். மூவரும் இறங்கவேண்டிய இடம் வந்ததும் இறங்கினார்கள். வழிப்போக்கர்களை முழுமையாக நம்பி அவர்களின் வழிநடத்தலில் சென்றான்.

"பதினொருமணியாச்சுசாப்பாட்டுக்குப் பாண் வாங்கிக் கொண்டு போவமா?." என்று யூஜீனிடம் சதீஸ் கேட்டதும், சாத், "சொல்லுங்கோ எத்தனை றாத்தல் பாண் வாங்கனும் நான் வாங்கிக் கொண்டு வாறன். இல்லாட்டி இந்தாங்க காசு இதுக்கு பாண் வாங்குங்க" என்றான்.

தொடரும்...

# தமிழரசுக்கட்சி எதை நோக்கி பயணிக்கிறது?




இலங்கை தமிழரசுக்கட்சி ஓர் பாரம்பரியமான கட்சி மாத்திரமல்ல தமிழ்த்தேசியத்தை முதல் முதல் முன்னிறுத்தி ஆரம்பிக்கப்பட்ட வட கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்த தோன்றிய ஒரு கட்சியாகும். இலங்கை பாராளுமன்றில் 1948 ஆகஸ்ட் 20 ஆம் திகதி பிரஜாவுரிமை சட்டம் நிறைவேற்றப்பட்டது. மலையக மக்களின் பிரஜா வுரிமையை இந்த சட்டம் பறித்தது. இச்சட்டத்துக்கு தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் ஆதரவு வழங்கியதை ஏற்றுக் கொள்ளாத தந்தை செல்வநாயகம், கோப்பாய் வன்னியசிங்கம், திருமலை சிவபாலன் கட்சியிலிருந்து வெளியேறி தமிழ்த்தேசியத்தை இலக்காகக்கொண்ட இலங்கை தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் வளர்ச்சி பரிணமித்து வட கிழக்கிலுள்ள 29 ஆசனங்களில் 22 ஆசனங்களை கைப்பற்றும் அளவுக்கு மக்கள் அதரவு பெற்றுக் கொண்டது. மக்களின் பலமான ஆதரவு, வாக்கு வங்கியின் வளர்ச்சி, தலைவர்களின் ஆளுமை, தந்தையின் சிறந்த தலைமைத்துவம் பலம் வாய்ந்த ஆதரவாக வளர்ந்து கொண்டதன் காரணமாகவே 1956 தனிச்சிங்கள மசோதாவுக்கான எதிர்ப்பு, சிங்கள ஸ்ரீ போராட்டம், 1961 சத்தியாக்கிரகப் போராட்டம் என்பவற்றுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆவேசமான அதரவு கிடைத்தது.

வட கிழக்கின் தனி ஆளுமை கொண்ட கட்சியாக தமிழரசுக்கட்சி தென்பட்டதன் காரணமாகவே பண்டா - செல்வா ஒப்பந்தம் (27.7.1957), டட்லி - செல்வா ஒப்பந்தம் (24.3.1965) என்பவற்றை தேசிய தலைவர்கள் தந்தையோடு சேர்ந்துகொண்டார்கள்.

1948 முதல் 1977 ஆம் ஆண்டு வரையான அகிம்சை வழிப் போராட்டங்களால் பயன் இல்லை என்ற நிலையில் வட கிழக்கு மக்கள் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு வந்தார்கள். இதன் பின் 2001 ஆம் ஆண்டுவரை தமிழர் விடுதலைக்கூட்டணியாக பிறப்பெடுத்த கட்சி அடக்கி வாசிக்க வேண்டியிருந்தது. தலைவர் பிரபாகரனின் ஆசிர்வாதத்துடன் (20.10.2001) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. உடன் தேர்தலுக்கு சென்றாலும் 2004 ஆம் ஆண்டு தேர்தலில் 22 ஆசனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தாயகக் கட்சியாக தமிழரசுக்கட்சியே விளங்கியது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின் 2010 ஆம் ஆண்டளவில் கூட்டமைப்பு பதியப்படவேண்டுமென்ற கோரிக்கையை பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தியபோது அதை மறை முகமாக ஏற்றுக்கொள்ளாமல் தமிழரசுக்கட்சிபதிவைதட்டிக்கழித்து வந்தது. 2010 ஆம் ஆண்டு தேர்தலின் போதும், 2015 ஆம் அண்டு தேர்தலின் பின்னும் பல சூழ்ச்சிகள் காரணமாக தமிழ் காங்கிரஸ் ஈ.பி. ஆர்.எல்.எப் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து போயின. இதன் மாற்று நிலையாக 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலை தொடர்ந்து புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல் எப் கூட்டாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்பட்டபோதும் தமிழரசுக்கட்சியே தலைமை நிலைக் கட்சியாக செயற்பட்டு வந்தது. இதன் இன்னொரு வெடிப்பாக 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் ரெலோ, புளொட் தனித்து போட்டியிடப்போவதாக அறிவித்த நிலையில் தலைவர் பிரபாகரனின் ஆசிர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சின்னாபின்னப்பட்டுப் போனதற்கு தமிழரசுக்கட்சியின் தனி வழிப்போக்குகாரணமாகியதுஎன்பது கடுமையான விமர்சனங்களாக முன்வைக்கப்பட்டது.

தமிழரசுக்கட்சியின் இன்றைய போக்கும் அதன் சமகால நிலைபற்றி பலவேறு விமர்சனங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகிற நிலையில், தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் என்ன ஆகப்போகிறது என்ற கவலை வட கிழக்கிலுள்ள ஒவ்வொரு அதரவாளர்கள் மத்தியிலும் காணப்படும் கவலை கொண்ட கேள்வியாக மாறியுள்ளது.

தந்தை செல்வாவுக்குப்பின் தளபதி அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன் போன்றவர்களின் ஆளுமையான தலைமைத்துவம் போர் காலத்திலும் கட்சியின் பலத்தை பேணிவந்தபோதும் பின்வரும் பலவீனங்கள் கட்சியை அதள பாதாள நிலைக்கு கொண்டு வந்துவிட்டது என்பது புத்தி ஜீவிகளின் கருத்தாக அமைகிறது.

1. மக்களின் ஆதரவு வீழ்ச்சி
2. நிலையான கட்டமைப்பை பேணாமை
3. ஆளுமைமிக்க தலைமைத்துவம்
4. உள் நிலை முரண்பாடுகள்
5. சுயலாபம்கொண்ட கட்சியாளர்கள்
6. இளைஞர்களின் அதிருப்தி

மக்களின் ஆதரவு வீழ்ச்சி

இலங்கை தமிழரசுக்கட்சிக்கு மக்களிடமிருந்த செல்வாக்கு எதிர் பாராமல்வீழ்ச்சி அடைந்தமைக்கான குறிகாட்டிகளாக காணப்படுகிறது. 1977 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கூட்டாக பொதுத்தேர்தலில் இறங்கியபோது வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பலம் காரணமாக வட கிழக்கில் 18 ஆசனங்களைப் பெற்று எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்துகொண்ட தமிழர் விடுதலைக்கூட்டணி, பின்னைய தேர்தல்களில் பெற்ற ஆசனங்கள் இங்கு அட்டவணைப்படுத்திக் காட்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1977 | 18 த.வி. கூ | |
| 1989 | 22 த.வி.கூ | |
| 1994 | 05 த.வி கூ | |
| | 03 ஈரோஸ், புளொட், ரெலோ | |
| 2000 | 05 த.வி.கூ | |
| | 09 ஏனைய தமிழ்கட்சிகள். | |
| 2001 | 15 த.வி கூ | |
| 2004 | 22 த.தே. கூ. | |
| 2010 | 14 த.தே. கூ | |
| 2015 | 16 த.தே. கூ | |
| 2020 | 10 த.தே கூ | |

குறித்த வீழ்ச்சி எதை எடுத்துக்காட்டுகிறதென்றால் மக்கள் மத்தியில் காணப்படும் அதரவு - வீழ்ச்சியை நேராக எடுத்துக்காட்டுகிறது. இதற்கு காரணம் கட்சியின் மீதுள்ள ஆதரவு, நம்பிக்கை, விசுவாசம், மாற்றுக்கட்சிகளின் ஊடுருவல், தேசிய கட்சிகளின் வட கிழக்கு எழுச்சிகளையே பாடமாக சொல்லிக்காட்டுகிறது.

நிலையான கட்டமைப்பு இன்மை

எந்தவொரு அமைப்புக்கும் நிலையான கட்டமைப்பு இன்மையாயின் அது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக போய்விடும். யுத்த சூழ்நிலை காரணமாக கட்சியின் கட்டமைப்பின் மீது கவனம் செலுத்தாத காரணத்தினால் சீரழிந்து போனதாக கருதினாலும் யுத்தத்தின் பின் அதை செம்மைப்படுத்த தலைமைகள் போதிய கவனம் செலுத்தவில்லை என்பது பச்சைத்தனமான உண்மை. புதிய வர்களை இணைத்துக்கொள்ளல், இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கல், யுவதிகளுக்கான முன்னு ரிமை, சிறந்த ஆளுமைகளை கட்சியோடு இணைத்தல், போதிய பிரச்சாரமின்மை இந்த வீழ்ச்சிக்கான மூலங்கள்.

தலைமைத்துவ ஆளுமை

வாழையடி வாழையைப்போல் தலைமைகள் உருவாக வழி விட்டிருக்கவேண்டும். ஆளுமை மிக்க தலைமைத்துவம் கட்சியை நெறிப்படுத்தாமை, பலமான தீர்மானங்களை மேற்கொண்டு அதை நடைமுறைப்படுத்துவதில் பின்நின்றமை, எடுக்கப்படும் முடிவுகள், பேச்சுவாண்மை தீர்மானம் எடுத்தல், வழிநடத்தல் அனைத்திலுமே இன்று கட்சி பலவீனம் கொண்டதாக காணப்படுவதாக ஆய்வாளர்களும் புத்திஜீவிகளும் குற்றம்சாட்டி வருகிறார்கள்.

எனவே இவற்றில் மாற்றம், புரட்சி ஏற்படாதவிடத்து எதிர்வரும் தேர்தல்களில் மாற்றுக்கட்சிகள் விஸ்வரூபம் எடுத்துவிடும் என்பதை புரிந்து செயற்படவேண்டும்.




**திருமலை நவம்**

# பக்கச்சார்பற்ற விசாரணையே தேவை!



அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம்.புழீல்

ஈஸ்டர் தினத்தில் மேற்கொண்ட பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் அதன் சூத்திரதாரிகள் தொடர்பாக செனல் 4 வெளியிட்டுள்ள காணொளி பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்த சூழலில் அது தொடர்பான பக்கச்சார்பற்ற விசாரணைகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும் என பலரும் குரலெழுப்புவதை அவதானிக்க முடிகிறது. நிச்சயமாக அந்தக் கோரிக்கை நியாயமானது. ஆனால் இதற்கு முன்பு இருந்த இரண்டு ஜனாதிபதிகள் நியமித்த விசாரணைக் கமிஷன்களது விசாரணைகளுக்கும் பரிந்துரைகளுக்கும் என்ன நடந்தது என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

**உரிய விசாரணை ஏன் தேவை?**

தாக்குதல்களில் எமது சகோதர சமூகமான கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த 269 பேர் கொல்லப்பட்டு பலர் அங்கவீனமுற்று மற்றும் பலர் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் அந்த சமூகத்திற்கு கட்டாயமாக நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அடுத்ததாக இந்த தாக்குதல்கள் இலங்கை முஸ்லிம்களின் வாழ்வில் மிகப்பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம்கள் மிக மோசமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். பள்ளிவாசல்களுக்குள் அவற்றின் புனிதத்துவத்துக்கு பங்கமான முறையில் தேடுதல் நடாத்தப்பட்டதாகக் கூட செய்திகள் வெளிவந்தன. முஸ்லிம்களது வீடுகள். ஸ்தாபனங்கள் போன்றன தேடுதல் வேட்டைக்கு உள்ளாக்கப்பட்டன. முஸ்லிம்கள் பயத்தின் காரணமாக இஸ்லாமிய நூல்கள். சஞ்சிகைகள். பத்திரிகைகள் போன்றவற்றை எரித்தார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைகளில் தள்ளப்பட்டார்கள்.

சிறையில் தள்ளப்பட்ட பலர் எவ்வித குற்றங்களும் இல்லை என்று தற்போது விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால். அவர்களதும் மற்றும் அவர்களது உற்றார் உறவினர்கள். நேசத்துக்குரியவர்கள் ஆகியோரதும் உள்ளங்களில் ஏற்பட்ட மனக் கவலைகளையும் ஆழமான வடுக்களையும் வார்த்தைகளில் வடிக்க முடியாது என்பது ஒரு புறம் இருக்க. அவர்கள் தமது வழக்குகளில் இருந்து விடுதலையாகிக் கொள்வதற்கும் சட்டத்தரணிகளுக்காகவும் மற்றும் ஏற்பாடுகளுக்காகவும் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவுசெய்திருக்கிறார்கள். ஆனால். முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாத சட்டத்தரணிகளிற் சிலர் எவ்வித கட்டணங்களையும் பெற்றுக்கொள்ளாமல் இத்தகைய வழக்குகளுக்காக இலவசமாக முன்நின்றமையும் குறிப்பிடத்தக்கது. எது எப்படிப்போனாலும் இதற்காக ஆயிரக்கணக்கானவர்களது கால நேரங்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன என்பதும் முக்கியமான விடயமாகும்.

அத்துடன் இந்த நாட்டில் பல சமூகப் பணிகளிலும் மற்றும் தேச நிர்மாணப் பணிகளிலும் ஈடுபட்ட. தனிநபர்களும் இயக்கங்களும் ஈஸ்டர் தாக்குதல்களைத் தொடர்ந்து முடக்கப்பட்டன. சில தடை செய்யப்பட்டன. சந்தேகக் கண்கொண்டு மக்கள் அவற்றை பார்க்கும் அளவுக்கு நிலை உருவாகியது. இந்த அமைப்புக்களது சில அணுகுமுறைகள் நாட்டிற்கும் காலத்திற்கும் ஒவ்வாதவையாக இருந்திருக்கலாம். ஆனால் அவற்றை நிதானமாக அணுகி நெறிப்படுத்தியிருக்கலாம்.

ஆனால். இந்த அமைப்புகளது சமூக நலப்பணிகளால் பயனடைந்த அனாதைகள். விதவைகள். அங்கவீனர்கள். கல்விச் சகாய நிதிகளைப் பெற்றவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக உதவியின்றி இப்போது வாடிக்கொண்டிருப்பதாக பலரும் அங்கலாய்க்கிறார்கள்.

இதுவரைக்கும் நாளாந்தம் பலருக்கு உளவுப் பிரிவினரிடம் இருந்து தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண்டிருப்பதாகவும் கேள்விக்கு மேல் கேள்வி கேட்பது. மணித்தியாலக் கணக்கில் விசாரணை நடத்துவது. தடுத்து வைப்பது. ஒரே கேள்விகளை பல தடவை கேட்பது. ஒரே ஆவணத்தை பல தடவை சமர்ப்பிக்கக் கேட்பது. வித்தியாசமான நபர்கள் வித்தியாசமான இடங்களில் இருந்து விசாரணைக்காக வருவது என்றெல்லாம் விசாரணைகள் இன்று வரை தொடர்வதாகவும் பரவலான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

முஸ்லிம் சமூகத்திற்கு தலைமை தாங்கக்கூடிய முன்னோடிகளது மன நிலையை பலவீனப்படுத்தி அனாதைச் சமூகமாக மாற்றும் நோக்கிலேயே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறதா என சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. தாக்கு தல்களைத் தொடர்ந்து பலர் அவர்கள் முஸ்லிம்கள் என்பதற்காக தொழில்களில் இருந்து நீக்கப்பட்டதாகவும் இன்னும் பலருக்கு பதவி இறக்கம் செய்யப்பட்டதாகவும் பல தொழில் மையங்கள் முஸ்லிம்களுக்காக கதவுகளை மூடிக்கொண்டதாகவும் அக்காலத்தில் பேசப்பட்டது.

இஸ்லாமிய இயக்கங்களது நிகழ்ச்சி நிரல்கள் மாற்றப்படவேண்டும் என்றும் அரச பாடசாலைகளில் கற்பிக்கப்படும் இஸ்லாம். இஸ்லாமிய நாகரீக பாடங்கள். மற்றும் மதரஸாக்கள். அஹதிய்யாக்கள் என்பவற்றின் பாடத்திட்டங்கள் என்பன தீவிரவாதத்தையும் பயங்கரவாதத்தையும் தூண்டுகின்றன என்றும் எனவே அவை மாற்றப்படவேண்டும் என்று அழுத்தமாகக் கூறப்பட்டு அதற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவ்வப்போது செய்திகள் வெளிவந்தன.

முஸ்லிம்களின் தனித்துவத்தை பாதுகாப்பதற்கும் இஸ்லாமிய ஞானங்களை அதிகரிப்பதற்குமான ஊற்றுக் கண்களை மூடுவதற்கும் அவர்கள் இஸ்லாத்தை கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளை முற்று முழுதாக இல்லாமல் செய்வதற்குமான முயற்சிகளாக இவை இருக்கலாம் என சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இந்த நாட்டில் குற்ற மனப்பாங்கோடு வாழும் நிலைக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தள்ளப்பட்டிருப்பது போல் தெரிகிறது.

**பக்கசார்பற்ற நீதி அவசியம்**

இன்னும் ஒரு கருத்தையும் மிக அழுத்தமாகக் கூறவேண்டும். அதாவது. முஸ்லிம் சமூகத்துக்குள் தீவிரவாத கருத்துக்களை கொண்டவர்கள் உருவாகு வதற்கான ஏற்பாடுகள் இருப்பின் அவற்றைக் கண்டுபிடிப்பதும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும் இந்த நாட்டின் பொறுப்பு வாய்ந்த நிறுவனம் என்ற வகையில் அரசின் கடமையாகும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடம் கிடையாது. ஆனால் அதற்கும் ஒரு முறைமை இருக்கிறது.

முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒரு சில விஷமிகள் ஒரு படுபாதகத்தை செய்துவிட்டார்கள் என்பதற்காக முழு சமூகத்தையும் சந்தேகக் கண்கொண்டு நோக்குவதும் எல்லோரையும் பழிவாங்குவதும் குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவதும் முறையல்ல. அப்படியாயின் இலங்கையின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலர் இந்நாட்டில் செய்துள்ள குற்றச் செயல்களுக்காக அவர்கள் சார்ந்துள்ள மதங்களையும் இனங்களையும் குற்றம் கூற முடியுமா என்பது கேள்விக்குறியாகும்.
இவ்வழகிய எமது இலங்கைத் தேசத்தை குட்டிச் சுவராக்கி சின்னா பின்னமாக்குவதற்கும், யுத்தங்களுக்கும், இன மோதல்களுக்கும். வன்முறைகளுக்கும் பின்னால் பிராந்திய அரசியல் நலன்களும் அரசியல்வாதிகளது குறுகிய இலாபங்களும் பொருளாதார நலன்களை தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக வேண்டி அல்லும் பகலும் உழைக்கும் பண முதலைகளும் இருப்பதும் தெளிவான உண்மைகள் என்பதை அனைத்து இனத்தவர்களும் குறிப்பாக அரசும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

மேலும் இந்த பயங்கரவாத தாக்குதல்கள் குறிப்பாக முஸ்லிம்களதும் பொதுவாக இந்த நாட்டினதும் வரலாற்றில் ஆழமான வடுக்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தி இருப்பதனால் அத்தாக்குதல்களை திட்டமிட்டவர்கள். அதற்கு பக்கபலமாக அமைத்தவர்கள் தொடர்பில் எவ்வித பக்கச் சார்புமற்ற. இதய சுத்தியுடன் கூடிய விசாரணையொன்று மேற்கொள்ளப்படவேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டு குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்படவேண்டும். அவர்கள் எந்த இனத்தை சேர்ந்தவர்களாக இருப்பினும், முஸ்லிம்களாக இருப்பினும் சரியே.

ஏனெனில். உலகப் பொது மறை அல்குர்ஆனில் அல்லாஹ் நீதி பற்றி 19 இடங்களில் கூறியுள்ளான். நீதியாளர்களை தான் நேசிப்பதாகவும் நீதி செலுத்துவதற்கு இனபந்துத்துவ உறவுகள் கூட தடையாக இருக்கக்கூடாது என்றும் அவன் வலியுறுத்துகிறான். "விசுவாசம் கொண்டவர்களே! நீங்கள் நீதியின் மீது நிலைத்திருப்பவர்களாகவும் உங்களுக்கோ அல்லது உங்கள் பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள். நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் உண்மையான சாட்சியம் கூறுங்கள். ஏனெனில். அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதையுடையவன். எனவே நியாயம் வழங்குவதில் மனோ இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள். மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது சாட்சி கூறுவதைப் புறக்கணித்தாலும் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான்."(4:135)
மாற்று இனத்தைச் சேர்ந்த ஒருவர் அநீதிக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாலும் அவருக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு முஸ்லிம்கள் முயற்சிக்க வேண்டும். அவர் முஸ்லிம்களின் விரோதியாக இருந்தாலும் சரியே. பகைப்புலத்தில் உள்ளவரது பக்கம் நியாயம் இருப்பினும் அதனையே அல்குர்ஆனை ஏற்றுக்கொள்ளும்.

"விசுவாசம் கொண்டவர்களே நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு. நீதி செலுத்தாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செலுத்துங்கள். இதுவே இறைபயபக்திக்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை யெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்"(5:08)

தனது மகள் பாத்திமா திருடினாலும் அவளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக நபியவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே. நாட்டில் சட்டத்தை. ஒழுங்கை. நீதியை நிலைநாட்டுவது. அநீதிக்கு உட்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது. அநியாயக்காரர்கள் தண்டிக் கப்படுவது போன்ற ஏற்பாடுகளுக்காக முஸ்லிம் சமூகம் தனது பூரண ஆதரவையும் அனுசரணையையும் அரசுக்கு வழங்க தயாராகவே இருக்கிறது. சூத்திரதாரிகளை தப்பவைப்பதற்கும் உண்மைகளை மூடிமறைப்பதற்கும் கவனங்களை திசைதிருப்புவதற்குமான சூட்சுமான திட்டமிடப்பட்ட சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**இஸ்லாம் நிராகரித்த பயங்கரவாதம்**

படுபாதகர்கள் மேற்கொண்ட ஈஸ்டர் தாக்குதல்கள் இஸ்லாமிய போதனைகளுக்கு முற்றிலும் முரணானவை. அது மட்டுமன்றி அவர்களால் இலக்குவைக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகத்தவர்கள் முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் அட்டூழியங்களைச் செய்தவர்கள் அல்லர். அமைதியாக ஆலயங்களில் வழிபாடுகளில் ஈடுபட்ட சிறுவர்கள். பெண்கள். வயோதிபர்கள் போன்ற அப்பாவிகளை கொலை செய்வதற்கு எந்த நியாயமும் இஸ்லாத்தில் இல்லை. பிற மத ஆலயங்களையும் மதத் தலைவர்களையும் யுத்தத்தில் சம்பந்தப்படாத சிவிலியன்களையும் தாக்கக்கூடாது என்பது இஸ்லாமிய யுத்த தர்மமாகும் என்றிருக்க இத்தாக்குதல்கள் எவ்வகையிலும் நியாயப்படுத்தப்பட முடியாதவை. எனவே. அந்த பயங்கரவாதிகளது தாக்குதல் மிலேச்சத்தனமானவை என்பதில் இஸ்லாமிய நோக்கில் கருத்து வேறுபாடு கிடையாது.

இலங்கை முஸ்லிம்கள் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வருடங்கள் வாழ்ந்து வருவது மாத்திரமன்றி இந்த தேசத்தை கட்டியெழுப்புவதில் அரசியல். பொருளாதாரம். பாதுகாப்பு போன்ற துறைகளில் ஏராளமான பங்களிப்புக்களை செய்திருக்கிறார்கள் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

10ஆம் பக்கம் பார்க்க...

# பலஸ்தீனில் இஸ்ரேல் நடத்துவது 'இனவழிப்பு'

**தூதரகத்திற்கு விஜயம் செய்து சர்வமதத் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கூட்டாக வலியுறுத்து**

(நா.தனுஜா)

எந்தவொரு மதத்தின் பெயராலும் யுத்தம் இடம்பெறுவதையும், சகமனிதர்கள் துன்புறுத்தப்படுவதையும், வன்முறைகள் பிரயோகிக்கப்படுவதையும் கடவுள் ஒருபோதும் விரும்பமாட்டார் என்பதை சகலரும் புரிந்துகொள்ளவேண்டும். அதேபோன்று யுத்தமும் வன்முறைகளும் எதிர்பார்க்கின்ற தீர்வை ஒருபோதும் பெற்றுத்தராது. எனவே இஸ்ரேல் – பலஸ்தீன மோதல் உடனடியாக நிறுத்தப்பட்டு, நியாயமான முறையில் பேச்சுவார்த்தை ஊடாகத் தீர்வு காணப்படவேண்டும் என்று சர்வமதத் தலைவர்களும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர். ஹமாஸ் அமைப்பினால் கடந்த 7 ஆம் திகதி தென் இஸ்ரேலில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து தீவிரமடைந்துள்ள இஸ்ரேல் – ஹமாஸ் மோதலின் நீட்சியாக கடந்த சில வாரங்களாக காஸாவில் இஸ்ரேலிய படையினர் நடத்திவரும் தொடர் தாக்குதல்களால் பெருமளவான சிறுவர்கள் உள்ளடங்கலாக ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். இருப்பினும் தற்போதுவரை அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்குலக நாடுகளின் அரசாங்கங்கள் இஸ்ரேலுக்கு ஆதரவளித்து வருவதுடன் அதன் மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டிக்கத் தவறியுள்ளன. இருப்பினும் மேற்குறிப்பிட்ட நாடுகள் உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் எவ்வித இன, மத, மொழி பேதங்களுமின்றி சகல மக்களும் ஒன்றிணைந்து இஸ்ரேலின் தொடர் தாக்குதலுக்கான வன்மையான கண்டனத்தையும், பலஸ்தீன மக்களுடனான தமது உடன்நிற்பு மற்றும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

அந்தவகையில் கடந்த சில வாரங்களாக இலங்கையிலும், குறிப்பாக தலைநகர் கொழும்பில் பலஸ்தீன மக்களுக்கான ஆதரவையும், உடன்நிற்பையும் வெளிப்படுத்தும் வகையிலான கவனயீர்ப்புப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அதன் ஓரங்கமாக கடந்த திங்கட்கிழமை (23) சகல மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மதத் தலைவர்களும், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், ஊடகவியலாளர்களும், இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா செயிட்டை கூட்டாகச் சந்தித்து, பலஸ்தீன மக்களுக்கான தமது ஆதரவினை வெளிப்படுத்தியிருந்தனர்.

அதன்படி மதத்தலைவர்கள் சார்பில் இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் துஷ்யந்த லக்ஷ்மன் ரொட்ரிகோ, மருதானை சமூக, சமய நடுநிலையத்தின் (சி.எஸ்.ஆர்) பணிப்பாளர் அருட்தந்தை ரொஹான், கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பி.ராஜன் ரொஹான், இலங்கை கிறிஸ்தவ மன்றத்தின் பொதுச்செயலாளர் அருட்தந்தை சுஜித்தர் சிவநாயகம், மிலாகிரிய சென்.போல்ஸ் தேவாலயத்தின் அருட்தந்தை ஆன்ட்ரூ, அருட்சகோதரி ரசிகா, காத்தான்குடி பிஸ்மி பாடசாலை ஃபிர்தௌஸ் நலிமி மற்றும் களனி பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் கெகிராவ சுதஸ்ஸன தேரர் ஆகியோரும், சிவில் சமூகத்தின் சார்பில் இளம் பெண்களின் கிறிஸ்தவ அமைப்பின் தலைவி சாரா ஆறுமுகம், சட்டத்தரணியும் தொழிற்சங்கவாதியுமான சுவஸ்திகா அருலிங்கம், சட்டத்தரணி ஷஃபானா குல் பேகம், சிரேஷ்ட சட்டத்தரணியும் தேர்தல்கள் ஆணையாளருமான அமீர் ஃபாயிஸ், சட்டத்தரணி அஸாத் முஸ்தபா, திருகோணமலை பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் பிரதிநிதி நூருல் இஸ்மியா, மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான மரிஸா டி சில்வா, அஷோகா ஆறுமுகம், ஷ்ரீன் ஸரூர் ஆகியோரும், சிரேஷ்ட ஊடகவியலாளர்களான ஹனா இப்ரஹிம், லக்ஷ்மன் குணசேகர ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

**சிரேஷ்ட சட்டத்தரணி அமீர் ஃபாயிஸ்**

இச்சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட சட்டத்தரணி அமீர் ஃபாயிஸ், 'பொதுமக்கள் மீதான ஹமாஸின் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை, அதற்கான பதிலடியாக ஹமாஸுடன் எவ்வகையிலும் தொடர்புபடாத சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உள்ளடங்கலாக காஸாவில் வாழும் மக்கள் மீது இஸ்ரேலியப் படையினர் நடத்திவரும் தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். அதேபோன்று இத்தாக்குதல்களைக் கண்டிப்பதை விடுத்து, அதற்கு ஆதரவாக செயற்பட்டுவரும் மேற்குலக நாடுகளின் போக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. எந்தவொரு யுத்தத்திலும் மனித உரிமைகள் மீறப்படக்கூடாது என்பதற்கு அப்பால், யுத்தமும் வன்முறைகளும் எதிர்பார்க்கின்ற தீர்வை ஒருபோதும் பெற்றுத்தராது. எனவே இந்த யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு, நியாயமான முறையில் பேச்சுவார்த்தை ஊடாகத் தீர்வு காணப்படவேண்டும்' என்று வலியுறுத்தினார்.

**அருட்பணி பி.ராஜன் ரொஹான்**

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற சுமார் மூன்று தசாப்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில் தற்போது பலஸ்தீன மக்கள் முகங்கொடுத்துவரும் வலியையும், வேதனையையும் நன்கு புரிந்துகொள்ளமுடிவதாகக் குறிப்பிட்ட அருட்பணி பி.ராஜன் ரொஹான், 'இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் என்பது மிகநீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கிறது. பல வருடங்களாக பலஸ்தீனத்துக்குள் புகுந்து இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களால் பலஸ்தீன மக்களின் பொருளாதாரம் வெகுவாக சேதப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அண்மையில் ஹமாஸ் நடத்திய மிகமோசமான தாக்குதலுக்குப் பதிலாக காஸாவில் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலை 'இனவழிப்பு' என்றே கூறமுடியும். திருமறையின்படி இஸ்ரேல் தீர்க்கதரிசன தேசம் எனவும், இந்த யுத்தம் கடவுளின் திட்டம் எனவும் கூறி இதனை நியாயப்படுத்துகின்ற போக்கையும் காணமுடிகின்றது. ஆனால் இது நாம்



மதத்தையும், அதன் போதனைகள் மற்றும் கோட்பாடுகளையும் புரிந்துகொள்ளும் விதத்திலேயே தங்கியிருக்கின்றது. எந்தவொரு மதத்தின் பெயராலும் யுத்தம் இடம்பெறுவதையும், சகமனிதர்கள் துன்புறுத்தப்படுவதையும், வன்முறைகள் பிரயோகிக்கப்படுவதையும் கடவுள் ஒருபோதும் விரும்பமாட்டார். எனவே இந்த யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கு சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்' என்று தெரிவித்தார்.

**சமூக செயற்பாட்டாளர் ஷ்ரீன் ஸரூர்**

மேலும் இச்சந்திப்பின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான சிவில் சமூக செயற்பாட்டாளர் ஷ்ரீன் ஸரூர் இதுபற்றி பின்வருமாறு கருத்துரைத்தார். பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் 75 வருடகால ஆக்கிரமிப்பு மற்றும் பலஸ்தீனர்களின் தனித்துவமான கலாசாரம்,மிகப்பழமை வாய்ந்த வரலாறு, அவர்களுக்குச் சொந்தமான நிலம், வளங்கள் மற்றும் அவர்களது நிலைத்திருப்பு என்பன படிப்படியாகத் திட்டமிட்டு அழிக்கப்படல் ஆகிய உண்மைகளை ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாகும். அதேபோன்று இஸ்ரேலுக்கு அவசியமான போர்க் கப்பல்கள், போர் விமானங்கள், ஆயுதங்கள் போன்றவற்றை உடனடியாக வழங்குவதன் மூலம் இந்த மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு மேற்குலகம் ஆதரவளிப்பது மிகுந்த வருத்தமளிக்கிறது என்றுகுறிப்பிட்டார்.

**சட்டத்தரணி சுவஸ்திகா அருலிங்கம்**

சிவில் சமூக செயற்பாட்டாளரும், தொழிற்சங்கவாதியும், சட்டத்தரணியுமான சுவஸ்திகா அருலிங்கம் கருத்து வெளியிடுகையில், 'இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போதான நிலவரத்தை ஒத்த சூழ்நிலையே தற்போது காஸாவிலும் நிலவுகின்றது. இஸ்ரேலிய மக்கள் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் முற்றிலும் தவறானதும், கண்டிக்கத்தக்கதுமாகும். இருப்பினும் அதற்குப் பதிலடியாக காஸா மீது இஸ்ரேலியப் படைகள் நடத்திவரும் தாக்குதல்களில் சிறுவர்கள் உட்பட பெருமளவானோர் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதல்கள் போர் தொடர்பான சர்வதேச சட்டங்களுக்கு முற்றிலும் புறம்பான விதத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பாவி பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், நாம் இவ்விவகாரம் தொடர்பில் அரசியல் நிலைப்பாடு எதனையும் எடுக்கத்தேவையில்லை. இருப்பினும் சர்வ நிச்சயமாக இந்த யுத்தத்துக்கு எதிரான மனிதாபிமான நிலைப்பாடொன்றைஎடுக்கவேண்டும்' என்று வலியுறுத்தினார்.

**அருட்தந்தை சுஜித்தர் சிவநாயகம்**

'இவ்விவகாரத்தில் இஸ்ரேலா? அல்லது பலஸ்தீனமா? என்பதைத் தாண்டி, நாமனைவரும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் பக்கம் நிற்கவேண்டும்' எனக் குறிப்பிட்ட இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் பொதுச்செயலாளர் அருட்தந்தை சுஜித்தர் சிவநாயகம், இந்த யுத்தத்தினால் பாதிக்கப்படும் அப்பாவி பொதுமக்கள் எந்தத் தரப்பை சார்ந்தவர்களாக இருந்தாலும் நாம் அவர்களை ஆதரிக்கவேண்டும் என்று தெரிவித்தார். அதேபோன்று இந்த யுத்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்திய அவர், 'இலங்கையில் இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுபவர்களோ அல்லது விமர்சிப்பவர்களோ மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும். இனங்களுக்கு இடையில் விரிசல்களை உருவாக்கக்கூடிய விதத்திலோ அல்லது பிழையாகவோ சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் கருத்துக்களால் தவறாக வழிநடத்தப்பட்டுவிடக்கூடாது' எனவும் எச்சரித்தார்.

**பலஸ்தீன தூதுவர் சுஹைர் ஹம்தல்லா செயிட்**

இச் சந்திப்பில் பலஸ்தீன நிலைமைகளை விளக்கும்போது கண்ணீர் சிந்தும் தூதுவர், இச்சந்திப்பின்போது பலஸ்தீன தூதுவர் சுஹைர் ஹம்தல்லா செயிட் மிகுந்த உணர்ச்சிப்பெருக்குடன் கண்ணீர்மல்க காஸாவின் தற்போதைய நிலவரம் குறித்து விபரித்தார். இஸ்ரேலுக்கு உதவுவதற்கு முன்வந்த பலஸ்தீனம் தற்போது முற்றாக அழிக்கப்பட்டு வருவதாகவும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட பலஸ்தீன மக்கள் உணவு, நீர், மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். அதேபோன்று தற்போது இலங்கை தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துவரும் நிலையில், அதனைச் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்ட தூதுவர், மிகமோசமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கைப் பிரஜைகளின் உயிரை அச்சுறுத்தலில் தள்ளவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். மேலும் தற்போது மேற்குலக நாடுகள் செயற்படும் விதம் குறித்து விளக்கமளித்த அவர், மிகவும் தனித்துவம் வாய்ந்த பலஸ்தீன சமூகத்தின் கலாசாரம், பாரம்பரியம் உள்ளிட்ட அனைத்தும் இப்போது அழிக்கப்பட்டு வருவதாகவும், இது 'இனப்படுகொலை' எனவும் சுட்டிக்காட்டினார்.

# "மலையக" தேசிய அடையாளத்தின் - பரிணாமங்களும், பரிமாணங்களும்



"மலையகம் 200" தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 15 யூலை 2023 அன்று நடத்தப்பட்ட மாநாட்டில் ஆற்றிய உரையின் விரிவான எழுத்து வடிவம் இது. இக்கட்டுரையின் சாராம்சமே உரையின் மையமாக இருந்தது.

"தேசியம்" என்பது கட்டமைக்கப்படுவது தான். பல சந்தர்ப்பங்களில் கற்பிதமாக உருவாக்குவதற்கான அவசியமும் இனக் குழுமங்களுக்கு ஏற்பட்டுவிடுகின்றன. தேசிய உருவாக்கத்துக்கான வரைவிலக்கணங்கள் காலத்துக்கு காலம் மாற்றம் கண்டும், புதுப்பித்தும் கொண்டு வளர்ந்து வந்திருக்கிறது. ஒரு தேசிய இனத்தின் உருவாக்கம் அதுகாரத்துவத்துக்காகவும் உருவாகலாம். அதுபோல அடக்குமுறையிலிருந்து விடுவிப்பதற்காகவும் தனது தனித்துவமான அடையாள தேசியத்தை உருவாக்கிக் கொள்ளலாம்.

இன்றைய "நவீன" உலக ஒழுங்கில் அடையாள பிரச்சினை எங்கெங்கிலும் மையப் பிரச்சினையாக ஆகி இருக்கிறது. இலங்கையில் 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தத்துக்கு ஊடாக ஒரே நாடாக்கப்படும் வரை இலங்கைக்கான ஒரு தேசியம் கூட இருந்ததில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வரை தமிழர்கள் கூட தமிழ் தேசிய இனமாக உணர்ந்ததில்லை. 80கள் வரை முஸ்லிம்கள் கூட தனித் தேசியமாக உணரத் தள்ளப்படவில்லை. மலையகத் தேசியம் பற்றிய கருத்தும் கூட 90களில் வெளிப்பட்டது தான். இனமாக உணர்வதும் தேசியமாக உணர்வதும், ஆவதும் வேறு வேறு அரசியல் உள்ளடக்கங்களைக் கொண்டவை.

இலங்கையின் தனித்துவமான பெரும்பான்மை இன மேலாதிக்க சித்தாந்தத்தின் வளர்ச்சி ஏனைய இனங்களின் தனித்துவத்தை நிலைநிறுத்தத் தள்ளின. இறுதியில் தனக்கான தேசியத்தை கட்டமைப்பதற்கும், வடிவமைப்பதற்கும், வரை விலக்கணப் படுத்துவதற்கும் ஒவ்வொரு இனமும் தள்ளப்பட்டன. இந்திய வம்சாவளி மக்களை இலங்கையில் சகல அரச பதிவுகளிலும், புள்ளிவிபரத் தொகை மதிப்புகளிலும் அதிகாரபூர்வமாக இந்தியத் தமிழர்கள் (Indian Tamils) என்று அழைக்கப்பட்டாலும், வெகுஜன மட்டத்தில் தோட்டத் தமிழர், பெருந்தோட்டத் தமிழர், மலையகத் தமிழர், என்றெல்லாம் அழைக்கப்படுவதுண்டு. ஆங்கிலேயர்கள் ஆரம்பத்தில் கூலிகள் என்றும், இந்தியக் கூலிகள் என்றும், கூலித் தொழிலாளர்கள் என்றும் பல ஆண்டுகளாக பதிவு செய்து வந்தார்கள். அதுபோக இம்மக்களை வெறுப்புணர்ச்சிமிக்க நையாண்டியுடன் கள்ளத்தோணி, வடக்கத்தேயான், தோட்டக்காட்டான் என்றெல்லாம் கூட ஏனைய சமூகங்கள் அழைத்து வந்தனர்.

இப்போது "மலையகத் தமிழர்" அடையாளத்துக்குள், இலங்கை முழுவதும் வாழும் அனைத்து இந்திய வம்சாவளியினரையும் அடக்கும் ஒரு முயற்சிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் நடைமுறை சாத்தியங்கள் பற்றி ஆராய்வதும், அதற்கான பின்னணி வழித்தடத்தை ஆராய்வதும் இக்கட்டுரையின் நோக்கம்.

மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினர் இன்னும் சொல்லப்போனால் இலங்கையில் நான்கு தேசிய இனங்களுக்கும் வெளியில் கவனிப்பாரற்று நெடுங்காலமாக வாழ்ந்துவரும் கதைகளை இலங்கையின் எந்த இலக்கியங்களும், ஆய்வுகளும் ஒழுங்காக பதிவு செய்ததில்லை. இதன் காரணமாக ஒரு பெரும் தொழிலாளர் வர்க்கக் கூட்டம் பற்றி மலையகத்தில் கூட புரிதல் அற்ற ஒரு நிலைக்கு வந்திருப்பதை இன்று காண முடிகிறது. அது மட்டுமன்றி கொழும்பில் இருக்கும் இந்திய வம்சாவளியினர் கூட ஏதோ உயர் வர்க்க, உயர் சாதி மேட்டுக்குடி என்றும், இந்திய நலன் பேணும் மக்கள் கூட்டம் என்றும் கூறித்திரிகிற அபத்தப் புனைவுகள் அவர்களுக்கு போதிக்கப்பட்டு வந்திருக்கிறது.

உண்மைகள் பல சந்தர்ப்பங்களில் கசக்கும். இயற்கை மருந்தும் கூட பல சந்தர்ப்பங்களில் கசக்கத் தான் செய்கிறது. ஆனால் அதை விழுங்குவது தான் நிவாரணி. மலையகத்தில் இந்திய வம்சாவளி மக்கள் செறிவாக வாழக் கிடைத்ததால் இனப் பண்பாட்டையும், மரபுகளையும், கலை இலக்கியங்களையும் பேண வாய்ப்பு கிடைத்தது. அதன் வாயிலாக இன அடையாளத்தையும் தக்க வைத்துக்கொள்ள முடிந்தது. அரசியல் தலைமைகளையும் உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பையும், கூட்டு அரசியல் அபிலாசைகளையும் கூட பேண முடிந்தது. ஆனால் மேல் மாகாணம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்கள் மலையகக் கூட்டுக்குள் இணைக்கப்படவில்லை.

செறிவாக வாழாததாலும், சிங்கள சமூகத்தினரோடு பரவலாக கலந்து இருந்ததாலும் அவர்களுக்கு என்று அரசியல் தலைமையை கட்டியெழுப்பும் வலுவற்றவர்களாக நெடுங்காலமாக இருந்திருக்கிறார்கள். இதை வாய்ப்பாக ஆக்கிக்கொண்ட சிங்களக் கட்சிகள் அவர்களை தமது அரசியல் லாபங்களுக்காகவும், வாக்கு வங்கிக்காகவும் பயன்படுத்திக் கொண்டது. இம்மக்கள் மத்தியில் இருந்த அரிதான சமூக இயக்கங்கள், சமூக செயற்பாடுகள் எதுவும் பெரும்போக்கு இலக்கியங்களில் பதிவு பெறவில்லை. மலையக மற்றும் ஈழத்து தமிழ் இலக்கியங்களில் உரிய வகையில் பதிவுக்கு உள்ளாகவில்லை. அதன் விளைவே அம்மக்கள் பற்றிய புனைவுகளும், திரிபுகளும், ஐதீகங்களும் இன்று விரவியிருக்கின்றன. சாதாரண பாமர மக்கள் மத்தியில் மட்டுமல்ல புத்திஜீவிகள், கல்விமான்கள், அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள் கூட இந்த அரசியல் குருட்டுத்தனம் மேலோங்க காரணமாக ஆகியிருக்கிறது.

ஈற்றில் மலையக அடையாளத்துக்கு கீழ் நாடு முழுவதும் உள்ள அனைத்து இந்திய வம்சாவளியினரையும் இணைத்தாக வேண்டும் என்று வலுக்கட்டாய அராஜகத்தில் குதித்திருக்கும் ஒரு சிறு கும்பலிடம் என்ன தார்மீக உரிமை இருக்கிறது என்று இதய சுத்தியுடன் அவர்களிடம் தட்டிக் கேட்டுக்கொள்ளும்படி கேட்க வேண்டியிருக்கிறது.

சரி கடந்த காலத்தைத் தான் விடுவோம். இப்போதாவது சுயவிமர்சனத்துடன் இம்மக்களை இதய சுத்தியுடனான அரசியல் வேலைத்திட்டத்துடன் இணைக்கிறார்களா என்றால் அதையும் எவரும் வைத்த பாடில்லை. இனக் கணக்கெடுப்பு எடுக்கும் போது கணக்கை கூட்டிக்காட்டவேண்டும் என்பதற்கப்பால் கிஞ்சித்தும் இம்மக்கள் மீது அக்கறை இல்லாத கூட்டம். இதைப் பற்றியெல்லாம் பேசக்கூடிய அளவுக்கு கருத்து ரீதியாக தம்மை வளர்த்துக்கொள்ளும் அளவுக்கு கூட மலையகத்துக்கு வெளியில் உள்ள இந்திய வம்சாவளியினர் தமக்கான கூட்டு இருப்பை தக்க வைத்துக்கொள்ளும் பலமற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். ஈற்றில் அவர்கள் இந்திய அடையாளமும் வேண்டாம், மலையக அடையாளமும் வேண்டாம் நாங்கள் இதுவரை காலம் இருந்ததைப் போல இலங்கை தமிழர்களாகவே இருந்துவிட்டுப் போகிறோம் என்கிற பதிலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படி இந்திய வம்சாவளி அடையாளத்தால் எந்தப் பயனும் இருந்ததில்லையோ அது போலத்தான் அவர்களுக்கு மலையக அடையாளத்தை ஏற்றுக் கொள்வதிலும் ஒரு பயனும் புதிதாக இருக்கப்போவதில்லை. அதற்கான நம்பிக்கை கடந்த காலங்களில் கொடுக்கப்பட்டதுமில்லை என்கிற யதார்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

காலம் கடந்துவிட்ட ஞானம் பிறந்திருக்கிறது என்று ஒரு வகையில் ஏற்றுக்கொண்டால் கூட "இரண்டே நிமிடத்தில் நூடில்ஸ்" தயாரிப்பது போன்ற வடிவத்தில் உடனடி "அடையாள உருவாக்கத்தை" ஏற்படுத்த விளைவது சுத்தக் கோமாளித்தனம். ஒரு சமூகத்தின் கூட்டு இருப்பை ஸ்திரப்படுத்துவதென்பதுஒருஅரசியல் போக்கின் நீட்சியில் அமைவதே. அபத்தமான அவசர கும்பல்தனத்தால் ஒப்பேற்றிவிட முடியாது தோழர்களே. இன்று இந்த உண்மைகளை எடுத்துக் கூறும்போது மலையகத்துக்கு எதிரானவர்களாகவும், ஏன் எதிரிகளாகவும் கூட குற்றம்சாட்டும் அளவுக்கு வன்மமாக இருக்கிறது. இதைச் சொன்னால் சாதியத்தை sympathy யாகப் பயன்படுத்தி இக்கருத்துக்கு வலுச் சேர்ப்பதாக குற்றம் சுமத்திவிடக் கூடும். பயத்தின் காரணமாகவே அந்த விடயங்களை ஆழமாகப் பேச முடியாமல் இருக்கிறது.

அடையாளத்தின் வழித்தடம்

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் இந்திய வம்சாவளி மக்கள் உறுதியாக தமது வேரை இங்கே நிலைநிறுத்த முயற்சிக்கையில் பேரினவாதத் தரப்பானது அவர்கள் திரும்பிச் செல்லவேண்டிய "இந்தியர்கள்" என்றே அடையாளப்படுத்தியது. தலைமுறைகளாக இலங்கையில் வேரூன்றிவிட்டபோதும், இந்தியாவுடனான தொடர்பறுந்துவிட்டபோதும் கூட "இந்தியர்" என்கிற அடையாளத்தையே இலங்கை அரசும், சிங்களத் தேசியவாதிகளும் தந்து கொண்டிருந்தார்கள். அந்த "இந்தியர்" என்கிற அடையாளம் அவர்களை சட்டபூர்வமாக நாட்டை விட்டுத்துரத்தும் வரை பெரிய சிக்கலாக உணரப்பட்டதில்லை. ஒரு கட்டத்தில் "இந்திய அடையாளம்" தமது இருப்புக்கே அச்சுறுத்தலாகும் ஒரு காரணியாக மாறியது. தேடித் தேடி வேட்டையாடி துரத்திப்பிடித்து நாடு கடத்தப்பட்டக் காலத்தில் "இந்தியர்" என்கிற அடையாளத்தை மறைக்கப்படாதுபாடுபட்டனர் இந்திய வம்சாவளியினர். பலர் தமது "சிகப்பு பாஸ்போர்ட்" என்று அழைக்கப்பட்ட இந்தியக் கடவுச் சீட்டை மறைத்தனர், எரித்தனர், புதைத்தனர், அழித்தனர்.

இந்திய அடையாளத்தைப் பேணுவதில் இனி எந்த அர்த்தமும் கிடையாது. நடைமுறை யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு அதைக் கைவிடுவது என்கிற முடிவுக்கு வந்தவேளை அவர்கள் அதற்கு மாற்றாக எந்த அடையாளத்தை தமக்கு சூட்டிக்கொள்வது என்கிற சிக்கலை எதிர்கொண்டனர். இலங்கையில் தமிழர் என்கிற அடையாளத்துக்கு உரியவர்களாக் ஏற்கெனவே வடக்கு கிழக்கில் பெருவாரியாக வாழும் பூர்வீகத் தமிழர்கள் இருந்தார்கள். எனவே இந்தியத் தமிழர் என்கிற பதத்துக்கு மாற்றுப் பதமாக இலங்கைத் தமிழர் என்கிற பதத்தையே ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

ஆனால் புள்ளிவிபரங்களின் படி மலையகப் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழர்களை இந்தியத் தமிழர் என்றே பதிவு செய்யப்பட்டு வந்தது.

தொடரும்...

**- என்.சரவணன் -**



# பிராந்திய செய்திகள்



## சிங்கள இளையோர்களே, நினைவேந்தும் உரித்தை நிலைநாட்டத் துணைசெய்யுங்கள் - நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி கோரிக்கை

ஈழத்தமிழர்களின் நெடுங்கால மரபுகளின்வழி இம்முறையும், இனிவரும் காலங்களிலும் எமது உறவுகள் புதைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று விளக்கேற்றி, மலர்தூவி, கண்ணீர் சிந்தி, வழிபடுவதன் மூலம் எங்களைத் நாங்களே ஆற்றுப்படுத்திக் கொள்கின்ற நினைவேந்தல் நிகழ்வுகளை, இராணுவத் தலையீடுகளோ, பொலிசாரின் அச்சுறுத்தல்களோ அற்று அமைதியான வழியில் கடைப்பிடிப்பதற்கு வழிவகை செய்வதன்மூலம் இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முன்வாருங்கள் என்று சிங்கள இளையோரை முன்னிறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த (24) நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்ட அவர், தமிழ்த்தேசிய மாவீரர் நாள் நெருங்கியிருக்கும் இந்தக் காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் அதிகரிக்கப்பட்டிருக்கும் இராணுவக் கெடுபிடிகள் குறித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவரது உரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது, 2015 ஆம் ஆண்டு ஐநா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டதற்கமைய, ஈழத்தமிழர்கள், இனவிடுதலைக்காக உயிர்துறந்த தமது பிள்ளைகள் விதைக்கப்பட்ட விளைநிலங்களான துயிலும் இல்லங்களுக்குச் சென்று நினைவேந்தும் உரிமையை நிலைநிறுத்தத் தொடங்கியிருந்தார்கள். ஆனால், தமது உறவுகளை இழந்து துயருறுகின்ற நெஞ்சம் எவ்வாறு இருக்கும் என்பதை உணரத்தலைப்படாத அதிகாரக் கரங்கள், அடிப்படை மனிதாபிமான உணர்வுகளைக்கூடப் புறந்தள்ளி இன்னுமின்னும் எங்கள் மக்களை வஞ்சிக்கும் செயற்பாட்டையே மிகக் கச்சிதமாக மேற்கொண்டு வருகின்றன. இனி ஒருபோதும் போரொன்றை விரும்பாத எமது மக்கள், பயங்கரவாதம் எனப்படுகின்ற இயல்புகளுக்கு ஒத்திசையாத வகையில் தங்களின் பிள்ளைகளை, அவர்கள் புதைக்கப்பட்ட நிலங்களில் சென்று வழிபடுவதற்கும், விளக்கேற்றுவதற்கும், கண்ணீர்விட்டு அழுவதற்குமான சந்தர்ப்பங்களைத் தடுக்கும் வகையில் அச்சுறுத்தல்களும், விசாரணைகளும் பரவலாக அரங்கேற்றப்படுகின்றன.

போர் முடிவுற்று பதின்மூன்று ஆண்டுகள் நிரம்பிய பின்னரும், வடக்கு, கிழக்கிலுள்ள 27 மாவீரர் துயிலும் இல்லங்களில், யாழ்ப்பாண மாவட்டத்தின் கொடிகாமம், எள்ளங்குளம், கோப்பாய் ஆகிய துயிலும் இல்லங்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லம், முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை, ஆலங்குளம், அளம்பில், நெடுங்கேணி களிக்காடு, மற்றும் மணலாறிலுள்ள உதயபீடம், கோடாலிக்கல் புனிதபூமி ஆகிய துயிலும் இல்லங்கள், வவுனியா ஈச்சங்குளம் துயிலும் இல்லம், மட்டக்களப்பு தாண்டியடி துயிலும் இல்லம் ஆகிய பன்னிரண்டு மாவீரர் துயிலும் இல்லங்கள் இன்றுவரை இராணுவப் படை முகாம்களாக முற்றுகையிடப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தின் தேராவில் துயிலும் இல்லத்தை விடுவிக்கக் கோரி கடந்த 2023.11.11 ஆம் திகதி பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு சூழலில், தமது பிள்ளைகளின் கல்லறைகள் அத்தனையும் போரியல் மாண்புக்குப் புறம்பான வகையில் இடித்தும், பெயர்த்தும் அழிக்கப்பட்ட பின்னரும், அந்தக் கல்லறைகள் நிறைந்திருந்த துயிலும் இல்லங்களைத் தமது புனிதபூமியாக எண்ணியே தமிழர்கள் இன்றளவும் பூசிக்கிறார்கள். திரும்பும் திசையெல்லாம் ஆக்கிரமிப்பின் கால்கள் ஆழ வேரூன்றிப் போயிருக்கும் தமிழர் தாயகத்தில், இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட துயிலும் இல்லங்கள் மீதான ஆக்கிரமிப்பும், வழிபாட்டுரிமை மீதான தடையும் மீளவும் வலிந்து ஏற்படுத்தப்படக் கூடும் என்ற அடிப்படையில், மக்களிடையே ஆழப்பதிந்திருக்கும் அரசு மீதான நம்பிக்கையீனமும், துயிலும் இல்லத்தின் புனிதத்துவத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதில் அவர்களுக்கிருக்கும் ஆத்ம எதிர்பார்ப்பும், அத்துயிலும் இல்ல வளாகங்களை எல்லைப்படுத்துவதிலும் அலங்கரிப்பதிலும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அத்தகைய மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய, காலத்தின் தேவை கருதியும் துயிலும் இல்ல மரபுகளுக்கமையவும் கனகபுரம், முழங்காவில், வன்னிவிளாங்குளம் ஆகிய மூன்று துயிலும் இல்லங்களினதும் நுழைவாயில் முகப்புகளை, அரை நிரந்தரமானவையாக நிறுவியிருக்கிறோம். எமக்கெதிராக அரசு பூசமுற்படுகின்ற பயங்கரவாத முலாம் குறித்த எந்தக் குறியீடுகளும் அவற்றில் காட்சிப்படுத்தப்படவில்லை. ஆனால் போரை நினைவுபடுத்துகின்ற, நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்ற எந்தவொரு அடையாளங்களும் இல்லாத வெற்று முகப்புகளை நிறுவியமைக்காக, இதுவரை நான் உட்பட பதின்மூன்று பேர் பொலிசாரால் தனித்தனியே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம்.

தமிழர்களின் பூர்வீக மண்ணை ஆக்கிரமித்து, நூறு வீதம் தமிழ் மக்களின் புழக்கம் செறிவாக உள்ள தமிழர் தாயகப் பகுதிகளின் பெருநகரங்களிலும், பிரதான வீதிகளிலும் ஏராளமான போர் வெற்றிச் சின்னங்கள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளன. குறிப்பாக கிளிநொச்சி நகர மத்தியில், டிப்போச்சந்திக்கும் கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கும் அருகேயுள்ள சந்திரன் பூங்கா வளாகத்தில், தமிழர்களின் இதயங்களைத் துளைத்து உள்நுழைவதான தோற்றப்பாட்டை வெளிப்படுத்தும், துப்பாக்கிச் சன்னம் ஒன்றுடனான போர் வெற்றிச் சின்னமும், ஆனையிறவுப் பகுதியில் A9 பிரதான வீதியின் இருமருங்கும், இருவேறு போர் வெற்றிச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன. இலங்கையைத் தாங்கி நிற்கும் வலிந்த கரங்கள் ஒருபுறமும், இராணுவச் சிப்பாய் ஒருவரின் இராணுவச் சீருடையுடனான உருவச்சிலை ஒருபுறமும் நிறுவப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் A35 பிரதான வீதியின் ஒருமருங்கில், ஆயுதம் தரித்த இராணுவச் சீருடை, சிங்கக்கொடி, துப்பாக்கி என்பவற்றை ஏந்தியவாறு வெற்றிக்களிப்பில் மிதக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவரது உருவச்சிலை நிறுவப்பட்டிருக்கிறது.

அடிப்படை உரித்துக்கோரிப் போராடிய ஒரு இனத்தைத் தோற்கடித்துவிட்டோம் என்கிற மமதையையும், போரின் குரூரத்தையும், படையினரது ஆக்கிரமிப்புச் சிந்தையையும் முகத்திலறைந்தாற்போல் பிரதிபலிக்கும் ஆயுத கலாசார நினைவுச்சின்னங்கள் சீர்குலைக்காத இன நல்லிணக்கத்தை, அவை நினைவுபடுத்தாத போரியல் உணர்வுகளை, நினைவேந்தல் உரித்தை நிலைநாட்டுவதற்காக அமைத்த துயிலும் இல்ல முகப்புகள் சீர்குலைக்கும் என்று சிந்திப்பதுகூட ஆக்கிரமிப்பின் அதியுச்ச வெளிப்பாடாகவே தென்படுகிறது என்றார். இதன்போது தேராவில் துயிலும் இல்ல விடுவிப்புத் தொடர்பான ஆர்ப்பாட்டத்தின்போது கையளிக்கப்பட்ட மகஜரின் பிரதியும், புதிதாக நிறுவப்பட்டுள்ள துயிலும் இல்ல முகப்பின் நிழற்படமும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள இராணுவ நினைவுச் சின்னங்களின் புகைப்படங்களும் சபாபீடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு நாடாளுமன்றிலும் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொலிவேரியனில் ஆபத்தை சந்திக்கும் மக்கள்



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்ததன் பின்னர் கடந்த மஹிந்த அரசினால் நிர்மாணித்து கொடுக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம மக்கள் நான்கு ஜனாதிபதிகளை மூன்று பாராளுமன்ற தேர்தல்களை சந்தித்தும் இதுவரை தம்முடைய குறைபாடுகள் நிபர்த்திசெய்யப்படவில்லை என ஏக்கம் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள வீதிகள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதையும், தரமற்ற அபிவிருத்திகள் மூலம் பாதைகள் உடைந்து காணப்படுவதையும் பலதடவைகள் அதிகாரிகள். அரசியல்வாதிகளுக்கு எடுத்துரைத்தும் எவ்வித பயனும் கிட்டவில்லை என்று தெரிவிக்கின்றனர். மழைகாலங்களில் பாம்பு போன்ற நச்சு விலங்குகள் வீடுகளை நோக்கி படையெடுக்கும் நிலை உள்ளதாகவும் மக்கள் குறை கூறுகின்றனர்.

வீதிகளில் குளம் போன்று நீர் தேங்கி நிற்பதால் பாதசாரிகளும், பாடசாலை மாணவர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் அடிக்கல் நடப்பட்டு பல வருடங்கள் மற்றும் பல மாதங்கள் கடந்தும் வீதியபிவிருத்திக்கு நடப்பட்ட எந்த அடிகற்களும் இன்னும் செயலுருவம் பெறவில்லை என்று தெரிவிக்கின்றனர். வடிகான்கள் நீர் வடிந்தோடமுடியாதளவு மண்ணால் அடைபட்டு இருப்பதுடன் டெங்கு உட்பட பல்வேறு நோய்களை உண்டாக்கும் தன்மைகொண்ட கொள்கலன்கள் வடிகான்களில் வீசப்பட்டும் காணப்படுகின்றது. வடிகான்களுக்கு பொருத்தமான மூடிகள் இடப்படாமையினால் சிறுவர்கள் அடிக்கடி விபத்துக்களை சந்திப்பதுடன் பெரியோர்களும் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

இது தொடர்பில் கல்முனை மாநகர பொறியியல் பிரிவும், பிரதேசத்திற்கு பொறுப்பான அதிகாரிகளும் அசமந்தபோக்குடன் செயற்படுவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். உரிய அதிகாரிகள் இந்த பிரச்சினைக்கு உடனடி தீர்வை வழங்க முன்வரவேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (நூருல் ஹுதா உமர்)

## "மாகாணம் செழிக்க மரம் நடுவோம்"



கிழக்கு மாகாணத்தில் 1000 பயன்தரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மரம் நடும் நிகழ்வு கடந்த (22) நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் இடம்பெற்றது.

"மாகாணம் செழிக்க மரம் நடுவோம்" எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்த மரம் நடும் நிகழ்வு சங்கத்தின் பிரதித் தலைவர் ஏ.சி.அயாத்து முஹம்மது தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல் கலந்துகொண்டு மரத்தை நாட்டி வைத்தார். இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.எம்.றிம்ஸான், பொருளாளர், உறுப்பினர்கள் மற்றும் வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இத்திட்டத்தின் முன்னெடுப்பில், அம்பாறை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் இதுவரை 378 பயன்தரும் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எல்.முஹம்மது அபுபக்கர் இதன்போது தெரிவித்தார். (அபு அலா)

## மிக மோசமாக சேதமடைந்து காணப்படும் வட்டுவாகல் பாலம்

முல்லைத்தீவு நகரத்திற்கான பிரதான பாதைகளில் ஒன்றாக காணப்படுகின்ற ஏ-35 தர வீதியின் வட்டுவாகல் பாலமானது எந்தவித புனரமைப்புக்களுமின்றி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இவ்வாறு சேதமடைந்து காணப்படும் பாலமானது அடிக்கடி உடைவுகள் ஏற்படும் போது தற்காலிக புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றதே தவிர நிரந்தர புனரமைப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது பாலத்தின் மையப்பகுதியில் பாரிய உடைவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் பாரிய குழியும் காணப்படுகின்றது.

வட்டுவாகல் பாலத்தில் பல்வேறு இடங்களில் வெடிப்புக்களும் வீதி பாதுகாப்பு அற்றதாகவும் வீதியில் சில இடங்களில் தாழிறங்கியும் காணப்படுகிறது. பலதடவைகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்து கூறியும் புனரமைப்பு பணிகள் எவையும் நடைபெறவில்லை. தற்போது மழையுடன் கூடிய காலமாகையால் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தை மேவி செல்வதோடு, கனரக வாகனங்களும் இதன் ஊடாக செல்லும் போது மேலும் உடைவு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் பல விபத்துகள் குறித்த பகுதியில் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கின்றது.

ஒவ்வொரு மழைகாலங்களிலும் குறித்த பாலம் இவ்வாறான நிலைமைக்கு செல்வதோடு ஆபத்தான முறையில் பிரயாணிகள் பயணம் செய்ய வேண்டிய நிலையும் காணப்படுவதாகவும், குறித்த பாலத்தினை சீரமைத்து தரும்படி அப்பாலத்தினூடாக பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

-முல்லைத்தீவு நிருபர் தவசீலன்-

# சினி துளிகள்






## நாயகியாக சீரியல் நடிகை பிரியங்கா



விஜய் தொலைக்காட்சியில் கல்லூரி, கலெக்டர் ஆகும் கனவு, காதல், குடும்பம் என எல்லாம் கலந்த கலவையாக ஒளிபரப்பாகி வந்த தொடர் தான் காற்றுக்கென்ன வேலி.

ஜனவரி 2018ம் ஆண்டு ஒளிபரப்பாக தொடங்கிய இந்த தொடர் 809 எபிசோடுகளுடன் கடந்த செப்டம்பர் 2023ல் முடிவடைந்தது.

இந்த தொடரில் வெண்ணிலா என்ற கதாபாத்திரத்தில் நடித்து மக்களின் மனதை வென்றவர் தான் பிரியங்கா.

கன்னட நடிகையான இவர் தமிழில் காற்றுக்கென்ன வேலி தொடரில் நடித்து இங்கேயும் பிரபலம் ஆகிவிட்டார்.

நிறைய போட்டோ ஷுட் எடுத்து இன்ஸ்டாவில் பதிவிட்டு ஆக்டீவாக இருந்துவந்த பிரியங்காவிற்கு இப்போது கன்னடத்தில் ஒரு பெரிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

அதாவது Bad Manners என்ற திரைப்படத்தில் நாயகியாக நடிக்க பிரியங்கா கமிட்டாகியுள்ளாராம். இந்த செய்தியை கேட்ட ரசிகர்கள் அவருக்கு வாழ்த்து கூறி வருகிறார்கள்.

## கோலாகலமாக நடந்த நடிகை ராதா மகள் திருமணம்



தமிழ் சினிமாவில் 80களில் கொடிகட்டி பறந்த ஒரு நடிகை. தமிழ் மட்டுமில்லாது தென்னிந்திய சினிமா மொழிகளில் நடித்து முன்னணி நாயகியாக வலம் வந்தவர்.

இப்போது படங்கள் நடிப்பதில்லை ஆனால் நிறைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபெற்று வருகிறார்.

சினிமாவை தாண்டி இவர் தனது சொந்த தொழிலை கணவருடன் சேர்ந்து கவனித்து வருகிறார்.

அண்மையில் தனது மூத்த மகள் கார்த்திகாவிற்கு கோலாகலமாக திருமணம் செய்து வைத்தார். கிலோ கணக்கில் மகளுக்கு தங்கம் போட்டு திருமணம் செய்துவைத்து கொண்டாடினார்.

கிலோ கணக்கில் தங்கம் மட்டுமில்லாது தனது மகளுக்கு சீதனமாக ஒரு விஷயத்தையும் செய்துள்ளார் நடிகை ராதா. அவரது சொந்த தொழில் ஹோட்டல் பிசினஸ் என்பது நமக்கு தெரியும்.

அவர் தனது மகள் கார்த்திகாவிற்கு 500 சவரன் தங்க நகைகளுடன் ஒரு நட்சத்திர ஹோட்டலையும் பரிசாக வழங்கியுள்ளாராம்.

## ரஜினிக்கு எழுதிய கதையில் விஜய்

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமாக இருப்பவர் தான் நடிகர் விஜய். தற்போது இவர் நடிக்கும் தளபதி 68 படத்தின் ஷூட்டிங் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த திரைப்படம் டைம் ட்ராவலை மையமாக வைத்து வெங்கட் பிரபு திரைக்கதையை அமைப்பதாக சினிமா வட்டாரங்களில் கூறப்படுகிறது.

கடந்த 2002 -ம் ஆண்டு விஜய் நடிப்பில், ஏ.வெங்கடேஷ் இயக்கத்தில் வெளிவந்த பகவதி திரைப்படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

ஏ.வெங்கடேஷ் ரஜினிக்காக தான் இந்த படத்தின் கதையை எழுதியுள்ளார். ஆனால் இவரால் ரஜினியை சந்திக்க முடியவில்லையாம். எனவே, அந்த கதையில் விஜயை நடிக்க வைத்தார். விஜய்க்கு இந்த படத்தின் கதை கேட்டதும் பிடித்துப்போய் ஓகே சொல்லிவிட்டார். இந்த படத்தின் கதையும் பாட்ஷா பட ஸ்டைலில் தான் இருக்கும்.

## தவறவிட்ட விக்ரம், பயன்படுத்திய சூர்யா



சூர்யா - விக்ரம் இருவரும் இணைந்து நடித்த திரைப்படம் பிதாமகன். பாலா இயக்கத்தில் உருவான இப்படம் கடந்த 2003ஆம் ஆண்டு திரைக்கு வந்தது.

இப்படத்தில் சூர்யா மற்றும் விக்ரமுடன் இணைந்து லைலா, சங்கீதா, கருணாஸ், மனோபாலா, மகாதேவன் என பல நட்சத்திரங்கள் நடித்திருந்தனர்.

மாபெரும் வெற்றியடைந்த இப்படம் இன்று வரை நம் மனதில் இருந்து நீங்கா இடத்தை பிடித்துள்ளது.

இந்நிலையில் இந்த சூப்பர்ஹிட் சூர்யா - விக்ரம் கூட்டணி பிதாமகன் படத்திற்கு முன்பே இணையவிருந்தது. ஆனால், அது நடக்காமல் போய்விட்டது.

**வாய்ப்பை தவறவிட்ட விக்ரம்**

அமீர் இயக்கத்தில் சூர்யா ஹீரோவாக நடித்து 2002ல் வெளிவந்த திரைப்படம் மௌனம் பேசியதே.

இப்படத்தில் சூர்யா கவுதம் எனும் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அதே போல் நடிகர் நந்தா கண்ணன் எனும் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

ஆனால், முதன் முதலில் சூர்யா நடித்த கவுதம் கதாபாத்திரத்தில் விக்ரம் தான் நடிக்கவிருந்தாராம். நந்தா நடித்திருந்த கண்ணன் கதாபாத்திரத்தில் சூர்யா நடிக்கவிருந்தராம்.

விக்ரமிடம் இந்த கதையை இயக்குனர் அமீர் கூறியபோது விக்ரம் இப்படத்தில் நடிக்க மறுத்துவிட்டாராம்.

## ஹீரோவாகும் விஜய் சேதுபதி மகன்


மக்கள் செல்வன் விஜய் சேதுபதியின் மகன் சூர்யா சேதுபதி முதன் முதலில் “நானும் ரவுடி தான்” படத்தில் விஜய் சேதுபதியின் சிறு வயது கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இது தான் அவருக்கு அறிமுக திரைப்படமாகும்.

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான இவர் மீண்டும் தனது தந்தையின் சிந்துபாத் திரைப்படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இப்படம் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு வெற்றிபெறவில்லை.

இதன்பின் தற்போது வெற்றிமாறன் இயக்கத்தில் சூரி மற்றும் விஜய் சேதுபதி நடித்து வரும் விடுதலை 2 படத்தில் நடித்துள்ளார். படப்பிடிப்பில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் கூட இணையத்தில் வெளிவந்தது.

இந்நிலையில் சூர்யா சேதுபதி தற்போது புதிய படத்தில் ஹீரோவாக நடிக்க கமிட்டாகியுள்ளார். ஸ்டண்ட் மாஸ்டர் அனல் அரசு இயக்கத்தில் உருவாகும் 'Pheonix வீழான்“ எனும் திரைப்படத்தில் சூர்யா கதாநாயகனாக அறிமுகமாகிறார்.

மேலும் சாம் சி.எஸ் இப்படத்திற்கு இசையமைக்கிறார். இப்படத்தின் பூஜை போடப்பட்டுள்ளது.



05ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்த நாட்டின் ஒருமைப்பாடு. இனங்களுக்கு இடையிலான ஐக்கியம் என்பவற்றை பாதுகாப்பதில் அவர்கள் காத்திரமான பங்களிப்புகளையும் செய்திருக்கிறார்கள். இந்த தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு அவர்கள் ஒரு பொழுதும் சவாலாக அமையவில்லை. பிரிவினைவாதங்களுக்கு ஒருபோதும் துணை நிற்கவுமில்லை.

ஆனால். அண்மைக்காலமாக அவர்களுக்கெதிரான கெடுபிடிகள் அவர்களது வரலாற்றுப் பங்களிப்பை முற்று முழுதாக மறக்கடிக்கச் செய்திருப்பது மட்டுமன்றி. அவர்களை துரோகிகளாகவும் சித்தரிக்கின்றன. ஒரு நாட்டின் மீது ஓர் இனத்தைச் சேர்ந்த குடிமகனுக்கு பாசமும் பற்றும் ஏற்பட வேண்டுமாயின் அந்த நாட்டின் ஏனைய இனங்களைச் சேர்ந்த பிரஜைகளும் அவனை நேசிக்க வேண்டும். அவனது கஷ்டத்தில் துன்பத்தில் பங்கெடுக்க வேண்டும். தேச கட்டமைப்பிலும் நிர்மாணப் பணிகளிலும் நீதி நியாயமாக நடப்பது. பரஸ்பர ஒத்துழைப்பு. மதிப்பு. நல்லெண்ணம் என்பன மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. சந்தேகப் பார்வை. ஒதுக்கல். இனவாதம் என்பன சமூகங்களின் உறவுகளுக்கு பெரும் நஞ்சாகும். ஒரு தேசம் என்ற வகையில் தமிழ் சமூகங்களது உறவுகள் விடயத்திலும் முஸ்லிம்களுடனான உறவுகள் விடயத்திலும் பெரும்பான்மைச் சமூகம் மிகப்பெரிய தவறுகளைச் செய்திருக்கிறது என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன் விளைவுகளை தற்போது அணுவணுவாக நமது தேசத்தின் ஒவ்வொரு குடிமகனும் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். பொருளாதார வீழ்ச்சி. மூளைசாலிகளது வெளியேற்றம். தற்கொலைகள். குற்றச் செயல்கள் அதிகரிப்பது என்பன அவற்றின் வெளிப்பாடுகளாகும்.

**வேறு பல விசாரணைகளும் தேவை**

ஈஸ்டர் தாக்குதல்களுக்கு காரணமாக அமைந்தவர்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் உரிய முறையில். பக்கசார்பற்ற முறையில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அது மட்டுமன்றி தர்கா நகர். திகனை. மினுவாங்கொடை. கிந்தோட்டை ஆகிய இடங்களில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்களை பலரும் மறந்து விட்டார்கள். அவற்றில் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள முஸ்லிம்களது சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்பட்டன. அவை முஸ்லிம்களது சொத்துக்கள் என்பதை விட நாட்டின் சொத்துக்களாகும். திகனை கலவரங்களில் மட்டும் 1500 கோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டதாக சிலர் கூறியதில் உண்மையிருக்கலாம். இவை அனைத்தும் இந்த நாட்டின் பிரிக்க முடியாத ஓர் அங்கமான முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட நஷ்டங்கள் என்று பார்ப்பதை விடவும் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் என்று பார்ப்பதே பொருத்தமாகும்.

ஆனால். அவற்றைச் செய்தவர்களுடைய பின்னணிகள் தொடர்பாகவோ அந்தக் குற்றவாளிகள் உருவாகுவதற்கு காரணமாக அமைந்த பாடத்திட்டங்கள். இயக்கங்கள். பின்புலங்கள். கலாநிலையங்கள் தொடர்பாகவோ எவ்வித ஆய்வுகளோ விசாரணைகளோ மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இவற்றுக்காக வேண்டியும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விசாரணைக் குழுக்களில் அங்கம் வகிக்க வேண்டியவர்கள் தொடர்பான ஆலோசனைகளுக்கு முஸ்லிம் சமூகத்தின் முக்கியஸ்தர்களும் அழைக்கப்பட வேண்டும். எதிர்காலத்திலும் இதுபோன்ற வன்முறைகள் நடைபெறுவதை தடுப்பதற்கும் இன நல்லுறவை வளர்ப்பதற்கும் நீண்டகால திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். இதற்காக முஸ்லிம் சமூகம் தனது ஒத்துழைப்பை என்றும் நல்க காத்திருக்கிறது.

அனைத்து சமூகங்களும் ஒற்றுமைப்பட்டு. பரஸ்பர புரிந்துணர்வுடன் சமய நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு சமாதான பூமி எமக்கு அவசியம். அதற்கு தடையாக அமையும் அரசியல் சுயநலவாதிகளை மக்கள் அனைவரும் தெளிவாகப் புரிந்துகொண்டு அவற்றை நிராகரித்து சமய. மொழி. இன வேறுபாடுகளுக்கு மத்தியிலும் கைகோர்த்து வீறுநடை போடவேண்டும். நாம் அனைவரும் ஒரே குடும்பத்தின் அங்கத்தவர்கள் என்ற மனநிலையுடன் பாசத்தால் கட்டுண்டு வாழ்வோமாக!

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



**சுழியோடி**

**27**



விடுதலைப்புலிகளின் வான் படைப் பலத்தின் அறிமுகத்துடன் வான் தாக்குதல்கள் தொடர்கின்றது. தமது இரண்டாவது தாக்குதலை சரியாக ஒரு மாதத்தில் அதாவது (24.04.2007) அன்று பலாலி விமான தளத்தின் மீது வான் புலிகள் வெற்றிகரமாக நடத்தினார்கள்.

இதன் பின் சிறிலங்காவின் பொருளாதார இராணுவ முக்கிய இலக்குகள் வான் புலிகளின் வேட்டைக்களமாக மாறியது. வான்புலிகள் பொருளாதார இராணுவ இலக்குகள் மீது மிக துல்லியமாக தாக்குதலை நடத்துவது அதிகரித்துச் சென்றது. சிறிலங்காவையும் அதற்கு உதவும் நாடுகளையும் கவலை கொள்ள வைத்தன.

இந்நிலையில் தான் சிறிலங்காவிற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தும் இன்னொரு தாக்குதல் நடைபெறுகிறது. வான் புலிகள் ஒத்துழைப்புடன் கரும்புலிகள் அணி நடத்திய மிகவும் துணிச்சல் மிக்க வெற்றிகரமான இணைப்புத் தாக்குதல் இது. தமிழர் தாயகத்தின் மீது பேரிழப்புக்களை ஏற்படுத்திய சிறிலங்கா வான்படையின் தங்குமிடமாக இருந்த அனுராதபுரம் சிறிலங்காவின் வான் படைத்தளம் தான் அந்த தாக்குதல் இலக்கு. அனுராதபுரம் வான்படைத்தளம் என்பது ஒரு சாதாரண வான் படைத்தளம் அல்ல. வடக்கு பகுதியில் இருக்கின்ற அனைத்து இராணுவ தளங்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதும். வடபகுதியில் ஒரு இராணுவ நடவடிக்கையை செய்வதானால் அதற்கு இதயமாகவும் கட்டளை செயலகமாகவும் செயற்படவேண்டிய தளமாகவும் இருந்தது. அது மட்டுமல்ல வடக்கு பகுதியில் அனைத்து இராணுவ செயற்பாடுகளுக்குமான ஒரு மையத்தளமாக இந்த வான் படைத்தளம் இருந்தது. இலங்கையில் உள்ள அனைத்து தளங்களினதும் இந்த தளம் மிகவும் வித்தியாசம் ஆனது. ஏனெனில் ஏனைய தளங்களில் மக்களின் போக்குவரத்திற்கும் சில பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆனால் முற்றுமுழுதாக இராணுவத் தேவைகளுக்காகவே ஒதுக்கப்பட்ட தளம் அனுராதபுர தளம். எந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு பொது மகனும் உள்நுழைய முடியாத அளவிற்கு மிகவும் இறுக்கமான பாதுகாப்பை பேணிவந்த தளம் இது. இந்த தளத்தின் மீது சிறிலங்கா பெரும் நம்பிக்கை கொண்டிருந்தது. அத்துடன் தளம் விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. மிகையொலி வானூர்திகளை நிறுத்துவதற்காகவும் எதிர்காலத்தில் பல தாக்குதல் வான்கலங்களை நிறுத்திவைக்க பாதுகாப்பான தளம் என்பதையும் கருதி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதேவேளை முற்றுமுழுதாக சிங்கள கிராமங்களால் சூழப்பட்ட பகுதி என்பதால் இதற்குள் புலிகள் ஊடுருவுவது என்பது மிகவும் கடினமான விடயம் என்றே சிங்கள இராணுவம் நம்பியிருந்தது. அந்த நம்பிக்கையில் மண்ணை அள்ளிப்போட்டனர் புலிகள். இப்பெரும் தளத்தின் மீதுதான் கரும்புலிகளும் வான்புலிகளும் இணைந்து (22.10.2007) ஒரு இணைந்த தாக்குதலை வெற்றிகரமாக நடத்துகிறார்கள்.

எல்லாளன் என தமிழீழ தேசிய தலைவரால் பெயரிடப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை குறித்து போராளிகளுக்கு மட்டுமல்ல, பொறுப்பாளர்கள் மத்தியில் கூட அன்றைய சூழ்நிலையில் இவ்வாறான தாக்குதல் நடைபெறும் என்று எதிர்பார்க்கவில்லை. தாக்குதலுக்கு முதல் நாள் தளபதிகளை அழைத்த தமிழீழ தேசிய தலைவர் "உங்களுக்கு நான் எல்லாளனை காட்டப் போகிறேன்" என்று கூறியபோது கூட யாருக்கும் என்ன எதுவென்று தெரியவில்லை.

அத்தனை தூரம் மிகவும் இரகசியமாக திட்டமிடப்பட்டு தலைவரால் ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இது. ஒரு தாக்குதல் நடவடிக்கையை தலைவரால் இத்தனை தூரம் இரகசியம் பேணப்பட்டு மேற்கொள்ளப்பட்டது என்றால் ஒரு பெரும் இராணுவ நடவடிக்கையை தலைவர் எவ்வாறு எதிர்கொண்டிருப்பார் என்பதை வரும்காலம் தான் பதில் சொல்லும்.

அதுவரை பொறுத்திருக்கத்தான் வேண்டும். கடும் பயிற்சி நீண்ட பயணம் என தங்களை வருத்தி இந்த வெற்றிக்காக உழைத்திருந்த கரும்புலிகள் தங்களையே கொடையாகக் கொடுத்து இந்த வெற்றியை தேசத்துக்கு பெற்றுத் தந்தார்கள். கரும்புலிகளுக்கும் தலைமைதாங்கி தளபதியாக சென்றவர் இளங்கோ. எத்தனையோ சமர்களங்களில் தோல்வி வந்து விடுமோ என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அந்த களமுனையை வெற்றிக் களமுனையாக மாற்றிய பெருமைக்குரிய போராளி இளங்கோவிற்கு உண்டு.

இந்த கரும்புலி அணியில் இரண்டாவது பொறுப்பாளராக வீமன் நியமிக்கப்பட்டிருந்தார். தலைவரின் பெய்ப்பாதுகாப்பு அணியில் நம்பிக்கைக்குரிய போராளியாக இருந்த வீமனிடம் தான் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தாயகத்தில் பயணிக்கும் போது அவருடைய பாதுகாப்புக்கான முழுப் பொறுப்பையும் தலைவர் ஒப்படைத்து இருந்தார். இவ்வாறு நம்பிக்கைக்குரிய போராளிகளைத்தான் இந்த நடவடிக்கைக்கு தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்திருந்தார். தலைவரின் நம்பிக்கையை இறுதிவரை தக்கவைத்தார்கள்.

அன்றிரவு தலைவர் தூக்கமின்றி தளபதிகளுடன் பெரும் எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டிருந்தார். அதிகாலை (3.20) மணிக்கு இளங்கோ சண்டையை துவங்கப்போவதாக தலைவருக்கு அறிவிக்கிறார். அப்போதுதான் அங்கிருந்த தளபதிகளுக்கே அனுராதபுரத்தில் பேரிடி விழப்போகும் உண்மை புரிகிறது. மிக வேகமாக தாக்குதலை நடத்தி தங்களுக்கு வழங்கப்பட்ட இலக்குகளை அழித்து அங்கிருந்த வானூர்திகளை தகர்த்து முடித்தார்கள். விடுதலைப்புலிகள் வெற்றிகரமான தாக்குதல் வரிசையில் ஒன்றான உலக நாடுகளை எல்லாம் விடுதலைப்புலிகள் பற்றி பேசவைத்த தாக்குதலாக இந்த தாக்குதலும் அமைந்துவிட்டது.

ஆனால் இந்தியா இத்தாக்குதல் குறித்து ஆழமாக அச்சம் கொண்டது. சிறிலங்கா படைகளின் வடக்கு கிழக்கிற்கான வான் படைத் தலைமையகம் அனுராதபுரத்தை மையமாகக் கொண்டு செயற்பட்டது. அதற்கு இந்த தாக்குதல் பெரும் ஆபத்தை ஏற்படுத்திவிட்டதாக கருதப்பட்டது. இத்தாக்குதல் மூலம் சிறிலங்கா வான்படையினரின் பல வானூர்திகள். வான்கலங்கள். ஆயுதங்கள். நவீன ராடர் கருவிகள் அழிக்கப்பட்டு பலகோடி பெறுமதியான இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டது.

தொடரும்...

# இலங்கையின் பொருளாதாரம்

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

கோப்பியின் விளைச்சல் வீதம் வீழ்ச்சியுறத் தொடங்கத் தேயிலையில் ஆர்வம் அதிகரித்தது. கோப்பியின் விளைச்சல் பாதிக்கப்பட்டமையால் பெருந்தோட்டச் சொந்தக்காரர்கள் தேயிலையை பயிரிட நடவடிக்கை எடுத்தனர்.

இலங்கையின் பௌதீக நிலைமைகள் தேயிலைக்கு ஏற்றவையாக இருந்தன. அத்துடன் இங்கிலாந்து சந்தையில் தேயிலைக்கு அதிக விலை கிடைத்தது. தென் இந்தியாவிலிருந்து தேயிலைச் செய்கைக்காக அதிக தமிழ் தொழிலாளர்கள் வரவழைக் கப்பட்டனர். தேயிலை உற்பத்தி பெருமளவு இயந்திரமயமானமை. நவீன இயந்திர சாதனங்களுடனான தொழிற்சாலைகள் தரமான தேயிலையை உற்பத்தி செய்தமை, புகையிரத வீதிகள், பெருந்தெருக்கள் காரணமாகக் போக்குவரத்துத்துறைகள் விருத்தி யடைந்தமை, கொழும்பு துறைமுகம் விருத்தியடைந்தமை, இலண்டன் சந்தையில் சீனத்தேயிலைக்கு கேள்வி குறைந்தமை.

அன்றிலிருந்து இன்றுவரை தேயிலை இலங்கையின் முக்கிய பெருந்தோட்டப் பயிராக இருந்து வருகின்றது. அந்நியச் செலாவணியை அதிகமாகத் தேடித்தரும் பெருந்தோட்டப் பயிராக தேயிலை விளங்குகின்றது.

1930ஆம் ஆண்டைத் தொடர்ந்து சர்வசன வாக்குரிமை யானது அளிக்கப்பட்ட காரணத் தினால் சனநாயக அரசியலில் குடியானவர்கள் சக்தி வாய்ந்த வர்களாகக் காணப்பட்டனர். இக்காலத்தில் நகர்ப்புறத் தொழிலாளர் மத்தியில் இடதுசாரிக் கருத்துக்கள் தீவிரமாகக் பரவி வந்தமையினால் குடியானவர்கள் இக்கருத்தினால் கவரப்படாமல் அவர்களை வேறு திசையில் திருப்புவதற்கும் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அவசியமாகக் காணப்பட்டது.

அத்துடன் 1ஆம் மகாயுத்தத்தின்போது வெளிநாட்டி லிருந்து உணவு இறக்குமதி தடைப்பட்டமை, உள்நாட்டில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியத்தினை வற்புறுத்துவதாக இருந்தது. ஒரு புறம் குடியானவன் பிரச்சினை, மறுபுறம் உணவுப் பிரச்சினை ஆகியவற்றினைக் கவனத்திற் கொண்டே 1930ஆம் ஆண்டினைத் தொடர்ந்து இலங்கையில் கிராமியப் பொருளாதாரத்தினை விருத்தி செய்வதற்கான பல செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1935ஆம் ஆண்டு குடியேற்றத்திட்டங்கள்.

கிராமிய விவசாய உற்பத்திகளுக்கு ஊக்கமளிக்கும் முகமாக 1948ஆம் ஆண்டு முதன் முதலாக இலங்கையில் உத்தரவாத விலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

விவசாய நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதனைக் குறிக்கோளாகக் கொண்டு 1951ஆம் ஆண்டு உரமானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படல்.

கிராமிய விவசாயிகள் பெருமளவிற்கு ஒழுங்குபடுத்தப்படாத துறையிடம் பெருமளவு கடனைப் பெற்றுக் கொடூரமாகச் சுரண்டுவதனைத் தவிர்ப்பதற்காக 1947இலிருந்து அரசாங்கம் கிராமியக் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

1972இல் பிரதேச அபிவிருத்திச் சபைகள் அமைக்கப்பட்டமை.

இலங்கையில் விவசாயிகளின் நிலப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட முதலாவது சட்டமே 1935இல் இயற்றப்பட்ட காணிவிருத்திச்சட்டமாகும்.

இந்தவகையில் 1935 – 1972க்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட காணிச்சீர்திருத்தச் சட்டங்கள் இலங்கைப் பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தின.

இலங்கையில் 1955ஆம் ஆண்டுவரை கைத்தொழில் வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்கான பொதுவானதொரு கொள்கையென ஒன்று இருக்கவில்லை. ஏனெனில் இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து கொரிய யுத்தத்தினால் ஏற்பட்ட றப்பர் செழிப்பினாலும், பின்பு ஏற்பட்ட தேயிலையின் விலை ஏற்றத்தினாலும் போதிய வெளிநாட்டுச் செலாவணியினைப் பெறக்கூடியதாக இருந்தது. இதனால் இலங்கையினால் தேவையான கைத்தொழிற்பொருட்களை இறக்குமதி செய்யக்கூடியதாக விருந்தது.

1952ஆம் ஆண்டு உலக வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தனியார்துறை, அரசாங்கத்துறை ஆகிய இரண்டும் கைத்தொழில் வளர்ச்சியில் பங்குகொள்ள வேண்டிய அவசியத்தினை வற்புறுத்துவதாக இருந்தது.

மேலும் நாட்டின் தொழில்நுட்ப அறிவினையும், மூலதன வசதிகளையும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்பதுடன் பாரிய தொழிற்சாலைகளை அரசாங்கம் உருவாக்குவதனைக் கண்டித்ததுடன், அநேக சிறு கைத்தொழில்களை அரசு அபிவிருத்தி செய்ய வேண்டுமெனவும் சிபாரிசு செய்திருந்தது.

1956ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஏற்பட்ட தீவிரமான வெளிநாட்டுச் செலவாணிப் பிரச்சினையானது கைத்தொழிற் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலையினை உருவாக்கியது. எனவே இலங்கையின் கைத்தொழிற் கொள்கையானது வெளிநாட்டுச் செலாவணியினைச் சேமித்தல் என்ற அடிப்படையில் இறக்குமதி செய்யும் கைத்தொழில் நுகர்வுப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் அல்லது இறக்குமதி பிரதியீடு என்ற குறிக்கோளைக் கொண்டதாக இருந்தது.

அந்தவகையில் இலங்கையில் கைத்தொழிலாக்கத்தினை ஏற்படுத்த எடுத்த முதலாவது நடவடிக்கையாக 1955ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட கூட்டுத்தாபனச் சட்டமானது அமைந்தது. இச்சட்டத்தின் படி அரசாங்க கைத்தொழிற் செயற்றிட்டங்கள் மூன்று கட்டங்களினூடாக தனியார் களினால் பொறுப்பேற்பதற்கு வழிவகுக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் கலப்பு பொருளாதாரத்தில் நம்பிக்கை கொண்டிருந்தமையினால் இலங்கையின் கைத்தொழிற் கொள்கையினால் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களை விருத்தி செய்தல் முக்கியமான அம்சமாக இடம்பெற்றிருந்தது.

1957ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்கனவேயிருந்த பல அரசாங்கக் கைத்தொழில்கள், கூட்டுத்தாபனங்களாக மாற்றப் பட்டதுடன் பல புதிய கைத்தொழில் கூட்டுத்தாபனங்களும் உருவாக் கப்பட்டன.

இலங்கையில் தனியார் துறை பலவீனமாகதாக இருந்ததால் பாரிய கைத்தொழில் முதலீடுகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் தனியார்துறை முதலீடுகள் இலாபம் கூடிய துறைகளிலே முடக்கப்படுவதனால் இலாபம் குறைந்த அத்தியாவசிய கைத்தொழில் உற்பத்தித் துறைகளில் அரசாங்க முதலீடுகள் இலாபம் கூடிய துறைகளிலே முடக்கப்படுவதனால் இலாபம் குறைந்த அத்தியாவசிய கைத்தொழில் உற்பத்தித்துறைகளில் அரசாங்க முதலீடுகள் அவசியமாக இருந்தன.

1958ஆம் ஆண்டு 12 ஆக இருந்த அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் 1977இல் 28ஆக அதிகரித்துள்ளன. இக் கூட்டுத்தாபனங்கள் சீமெந்து, இரசாயனம், பெற்றோலியம், உருக்கு, உப்பு, ஒட்டுப்பலகை போன்ற பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படைக் கைத்தொழில்களாகவும், ஏனையவை சீனி, காகிதம், பால், புடவை, மா போன்ற அத்தியாவசிய நுகர்வுப் பொருட் கைத்தொழில்களாகவும் அமைந்துள்ளன.

1950ஆம் ஆண்டிற்கு பின்பு றப்பர், தேயிலை, தென்னை ஆகியவற்றின் புனர் நடுகை மேற்கொள்ளப்பட்டமையும் உற்பத் தித்திறன் அதிகரிப்பிற்கு மற்றுமொரு காரணமாகும். பெருந்தோட்ட விவசாய விருத்திக்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாகும்.

புனர்நடுகை மானிய உதவித்திட்டம்

1. 1953 – றப்பர் புனர் நடுகை மானியத்திட்டம்
2. 1959 – தேயிலை புனர்நடுகை மானியத்திட்டம்

உரமானியத் திட்டம் (1950)

தேயிலைத் தொழிற்சாலை அபிவிருத்தி மானியத் திட்டம் (1962)

நிறுவன ரீதியான ஊக்கங்கள்

1. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (1958)
2. தேயிலை ஆராய்ச்சி நிலையம்
3. றப்பர் ஆராய்ச்சி நிலையம்
4. தெங்கு ஆராய்ச்சி நிலையம்

பயிர் மாற்று நடுகைத் திட்டம்

1. பப்பாசி
2. அன்னாசி
3. முகக்கட்டைச்செடி
4. சூரியகாந்தி

இலங்கையில் 19ஆம் நூற்றாண்டின் முதற் காலப்பகுதியிலிருந்து பெருந்தோட்ட விவசாயத்தின் ஆரம்பத்துடன் வெளிநாட்டு வர்த்தகமானது முக்கிய இடத்தினைப் பெறலாயிற்று.

1970க்கு பின்பு பெருதோட்டப் பயிர்களின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உரநுகர்வு குறைக்கப்பட்டமை மட்டுமன்றி, காணிச் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட அசாதாரண நிலையும் மிக முக்கியமான காரணியாக அமைந்திருந்தது.

இலங்கையில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கைத்தொழிற் கொள்கையானது ஒரு ஆரோக்கியமான கைத்தொழில் வளர்ச்சியினை ஏற்படுத்த தவறிவிட்டது. மேலும் தவறான முறையில் கைத்தொழில் துறையில் சாதனங்கள் முடக்கப்பட்டுள்ளமை நீண்டகாலக் கைத்தொழில் வளர்ச்சியினைப் பாதிப்பதாக அமைந்துள்ளது.

இலங்கையில் 1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியகட்சி அரசாங்கமானது ஆட்சிக்கு வந்தபோது வேலை யின்மை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகிய இரண்டும் மிகத் தீவிர பிரச்சினைகளாகக் காணப்பட்டன. அந்தவகையில் சுதந்திர வர்த்தக பொருளாதாரத்தினை அறிமுகப்படுத்தியது.

எனவே தொகுத்து நோக்கும் போது இலங்கைப் பொருளாதாரத்தில் கோல்புறூக் கமரன் சீர்திருத்தத்தின் விளைவாக பெருந்தோட்ட பொருளாதார விருத்தி ஏற்பட்டதை தொடர்ந்து கைத்தொழில் அபவிருத்தி, அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள், வெளிநாட்டில் இலங்கையின் உற்பத்தி பொருட்களுக்கு இருந்த கேள்வி, வர்த்தக வளர்ச்சி போன்ற காரணிகள் செல்வாக்கு செலுத்தின எனலாம்.

**நெற்றிப்பொறியன்**

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலும், ரணிலின் சர்வதேச விசாரணையும் - நடக்கப்போவது என்ன?

## பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்

கடந்தவாரத் தொடர்ச்சி...

**கேள்வி : சமாதான காலகட்டத்தில் வடகிழக்கில் சுனாமிக் கட்டமைப்பை ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உருவாக்கி அதன் ஊடாக விடுதலைப்புலிகளை வெளிக்கொணர்ந்து கருணா - பிள்ளையான் பிளவினையும் ஏற்படுத்தி இராஜதந்திர ரீதியில் செயற்பட்டார். இதில் இனப்படுகொலை, சர்வதேச விசாரணை, உள்ளகப் பொறிமுறை என்கிற விடயங்களில் எதுவும் இந்த நாட்டில் அல்லது சர்வதேசமட்டத்தில் எட்டப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றபோது, உண்மையில் தமிழ்த்தரப்பு ஜெனீவாவை நம்பி அல்லது சர்வதேச விசாரணை என்கிற ரீதியில் பயணிப்பது சாத்தியப்படும் என்று நினைக்கிறீர்களா?**

**பதில் :** உண்மையில் இதில் பல விடயங்கள் இருக்கின்றது. இதில் எத்தனையோ ஆணைக்குழுக்கள், விசாரணைகள் இருக்கிறது. பரணகம ஆணைக்குழு, இலங்கை அரசின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்று. இதனது சிபாரிசினையே நடைமுறைப்படுத்தாத அரசாங்கம் தான் இலங்கை அரசாங்கம். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களது கட்சி தேர்தல் காலங்களிலும் சரி அதற்கு முன்னரும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லவில்லை, சர்வதேச நீதிமன்றத்தை நோக்கிச் செல்லவில்லை என்கிற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். நாங்கள் பாராளுமன்றத்திற்குச் சென்றால் இவற்றைச் செய்வோம் என பகிரங்கமாகவே மக்கள் முன் வாக்குறுதிகளை வழங்கி இன்று இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். நாங்கள் எமது மக்களுக்காக செல்லக்கூடிய பாதையில், தெரிந்த வகையில் எங்களது மக்களுக்கான நீதிக்காக போராட்டங்களை முன்னெடுக்கின்றோம் என்பது சிறந்த விடயம். அந்த வகையில் அவர்கள் கொடுத்த வாக்குறுதியினை எந்த அளவிற்கு முன்னெடுத்துள்ளார்கள் என்பதையும் மக்கள் தான் தீர்மானிக்கவேண்டும். நாங்கள் கூறிய விடயம் சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்வதென்றால், உதாரணமாக இலங்கையில் ஒருவரைக் கைது செய்வதற்கு ஒரு முறை இருக்கிறது. அதாவது ஒன்று, யாராவது ஒரு பொலிஸ் நிலையம் சென்று எண்ட்ரி போட்டு அது விசாரணைக்குட்படுத்தி ஒருவரைக் கைது செய்து அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவார்கள். எதற்கும் ஒரு பொறிமுறை இருக்கிறது. அவ்வாறு தான் சர்வதேச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கும் ஒரு பொறிமுறை இருக்கிறது. அதேபோல தான் இலங்கையின் தமிழ் மக்களை ICCக்குச் கொண்டுசெல்ல சில சில சவால்கள் இருக்கிறது என்பதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்து எமது கட்சி சார்பாக கூறிக்கொண்டிருக்கிறோம். நாங்கள் விரும்பாமல் இல்லை அதற்கான முயற்சிகளை எடுக்கிறோம். ஆனால் நாங்கள் நினைப்பதுபோல இலகுவாக செய்திருக்கலாம் என்றால் அதனை எப்போதோ செய்திருக்கலாம்.




ஆனால் இதனை இலகுவாகச் செய்துவிடலாம் என்று வெளியில் மக்களிடம் கூறி பாராளுமன்றத்திற்குத் தெரிவாகிய இவர்கள், இன்றும் முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் திருப்தியடையும் விதத்தில் அவர்களின் முயற்சி இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். மக்களும் நீங்களும் கூறுவீர்கள் என்று நான் நினைக்கிறேன். அதேபோலத் தான் ஐ.நா மனித உரிமைப்பேரவையில் அங்கு நடைபெறும் விடயம் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும். அதாவது என்னதான் இலங்கை அரசாங்கம் வாக்குறுதிகளை வழங்கினாலும் மீண்டும் இந்தக் கேள்விகள் வந்துகொண்டேயிருக்கும்.

விடுதலைப் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டு எமது மக்கள் கொல்லப்பட்டு 14 வருடங்களைக் கடந்துவிட்டபோதிலும், சர்வதேச ரீதியாக இந்த விடயங்கள் தொடர்ந்தும் பேசப்பட்டுக்கொண்டிருப்பதற்கு எங்களது முயற்சிகள் தான் காரணம். எமது கட்சி மாத்திரமல்ல, இதில் பல சிவில் அமைப்புக்களும் இருக்கிறார்கள். இல்லை ஐ.நா எங்களது விடயங்களைப் பார்க்கவேண்டாம், நாங்கள் எங்களுடைய விடயங்களைச் செய்வோம் என ஒரு சிலர் கூறுவதைப்போல இருந்திருந்தால் இன்று அதுவும் இல்லாமல் போயிருக்கும்.

ஐ.நாவில் எங்களது பிரச்சினை பேசப்பட்டதன் காரணத்தினால் தான் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் அவர் முன்னெடுத்த விடயம் தான் TRC. பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக நாங்கள் ஜனாதிபதியுடனான சந்திப்பில் இந்த விடயமும் வேண்டாம் எங்களது மக்கள் இதனையும் நிராகரிக்கின்றார்கள் என்றோம். அதற்கு அவர், ஏன் என எங்களிடம் கேட்டார். அதில் அமைச்சர் அலி சப்ரி அவர்கள் அந்த TRCயின் வரைபினை எங்களிடம் தந்தார் பார்ப்பதற்காக. அந்த அறிக்கையானது ஆங்கில மொழியில் இருந்தது. எங்களது ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழில் தந்தால் தான் நாங்கள் கருத்துக்கூற முடியும் என்றனர். மேலோட்டமாக ஆங்கிலத்தில் இருந்த விடயங்களைப் பார்த்தால், சர்வதேச மேற்பார்வையோ அல்லது உள்ளகப் பொறிமுறையோ அந்த TRCயின் வரைபில் உள்ளடக்கப்படவில்லை. உண்மையில் அதனை வாசித்து அறிந்துகொள்வதற்கான நேரமும் போதவில்லை.

நான் அலி சப்ரியிடம் ஒரு வினாவினைத் தொடுத்தேன். அதாவது என்னுடைய சகோதரன் ஒரு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர். எனக்கான நீதி வேண்டும். உங்களுடைய TRCயில் இதற்கான தீர்வு என்ன என அவரிடம் வினவினேன். அதற்கு அவர், நீங்கள் காணாமலாக்கப்பட்டோரை பதியும் அலுவலகத்தில் பதியலாம். அவர்கள் உறுதிப்படுத்தி அடுத்த கட்டமாக நஷ்ட ஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளைச் செய்வார்கள் என்று கூறினார். நான் அதற்கு, காணாமல் ஆக்கப்பட்டவர். விசாரணை எப்படி செய்வது எனக் கேட்டேன். அதற்கு அவர், போதியளவு ஆதாரங்கள் இருந்தால் அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சென்று, காணாமல் ஆக்கப்பட்டவர் என்கிற ரீதியில் விசாரணை ஆரம்பிக்கப்படும். அதற்கான வழக்கினை தொடர்வார்கள். விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்றார். அதாவது அவர்களுக்கான ஒரேயொரு நோக்கம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கிவிட்டால் அத்துடன் அனைத்தும் நிறைவடைந்துவிடும் என்பதாகும். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாங்கள் பகிரங்கமாகக் கூறினோம்.

**கேள்வி : ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பின்னணியில் அண்மையில் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்தினால் காணொளி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அதில் பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அசாத் மௌலானா என்பவர் பல திடுக்கிடும் விடயங்களைச் சொல்கிறார். ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பில் பேசப்படுகின்றது. கண்முன் நடந்த படுகொலைச் சம்பவங்களுக்கே நீதி மறுக்கப்பட்டு இருக்கிறதே. இது பற்றி?**

**பதில் :** தமிழர்களின் நிலைமை இதுதான். உதாரணமாக, மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு இலங்கையின் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பு இருக்கிறது. இந்தப் பிரதேசத்திலே சட்டவிரோதமாக வாழ்பவர்களை உடனடியாக அகற்றுங்கள் என நீதிமன்றம் ஒரு தீர்ப்பினை வழங்க, மகாவலி அதிகார சபையும் இது சட்டவிரோதமான நடவடிக்கை, நீதிமன்றத் தீர்ப்பின் படி நீங்கள் இங்கிருந்து செல்லவேண்டும் என்கிற பதாதைகளை வைக்கின்றபோது, அதற்குக் கீழ் ஒரு அம்மணி கடையினைப் போட்டிருக்கின்றார். ஆதரவாக ஒரு பௌத்த பிக்குவும் செல்கின்றார். இதைக் கேள்வி கேட்கும் பண்ணையாளர்களை அந்த பிக்குமார் கட்டி வைக்கிறார்கள்.

அண்மையில் மதத் தலைவர்கள் உட்பட, சிவில்



சமூகப் பிரதிநிதிகளை என பலரை அடைத்துவைத்த சம்பவத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவ்விடயம் தொடர்பில் பொலிசாருக்கு அறிவித்தவுடன், பொலிசார் சம்பவ இடத்திற்குச் சென்று இவர்களை ஏன் கட்டி வைத்துள்ளீர்கள் என பௌத்த பிக்குவிடம் கேள்வி கேட்காமல், சென்றவுடன் பௌத்த பிக்குவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுகின்றார்கள். என்ன நடந்தது தேரர் எனக் கேட்கின்றனர்.

இது தான் இலங்கையில் சாதாரண ஒரு தமிழருக்கு நடக்கும் பிரச்சினை என்றால், நாட்டின் நீதிபதி ஒருவரே இன்று நாட்டைவிட்டு வெளியேறியிருக்கின்றார். அதைக் கூட தவறான பார்வையில் தென்னிலங்கை மக்களுக்குக் கூறுவதற்கு சரத்வீரசேகர போன்றோர் முற்படுகின்றனர். ஒரு நீதிபதி நாட்டைவிட்டு சென்றுவிட்டார் என்பதற்கு பல காரணங்களைக் கூறி விசாரணை நடத்தும் இவர்கள், சனல் 4 தொலைக்காட்சியில் பாரதூரமான விடயங்களைக் கூறியும் இதுவரையில் விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை.

நான் எந்தக் காலத்திலும் பிள்ளையான் என்பவரோடு இருக்கவுமில்லை. அவரது கட்சியில் செயற்படவுமில்லை. அவருக்கு ஆதரவாக நான் செயற்படவுமில்லை. ஏதோவொரு காலப்பகுதியில் நானும் பிள்ளையானும் ஏதோவொரு மேடையில் ஒன்றாக இருந்தோம் என்று கூறினால் அதற்குரிய காரணம், 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டேன். அப்பொழுது 08 வேட்பாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டனர். அந்தநேரத்தில் ஹிஸ்புல்லா தனிக்கட்சி. 08 வேட்பாளர்களில் 03 பேரை அவர் எடுத்துக்கொண்டார். சிவநேசத்துரை சந்திரகாந்தனது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் போட்டியிட்டது. அதாவது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, ஹிஸ்புல்லாவின் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இம் மூன்றும் கூட்டணி அமைத்து அன்றைய பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பில் போட்டியிட்டனர். அந்தநேரத்தில் அங்கஜன் இராமநாதன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் யாழில் போட்டியிட்டார்.

தொடரும்...

நேர்காணல் : இரணியன்

# "தமிழ் இன அழிப்பின் சாட்சியங்களைச் சொல்லத்துடிக்கும் மனிதப் புதைகுழிகள்"




பௌத்த பேரினவாத சிங்கள அரசு இலங்கையில் 75 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழர்களை முற்றாக அழிப்பதை நோக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டுவரும் செயல்பாடே இன அழிப்பு ஆகும். மனிதக் குழு ஒன்றினை முற்றாக ஒழிக்கும் முயற்சியுடன், அவர்களை முற்றாக அழிப்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயல்பாடே இனப்படுகொலை எனப்படுகிறது இது "ஜெனோசைட்" (Genocide) என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது.

இனப்படுகொலை (Genocide) என்ற வார்த்தையை முதன் முதலில் ரபேல் லேம்கின் என்பவர் 1944ல் வெளிவந்த "Axis Rule in Occupied Europe" என்ற புத்தகத்தில் பயன்படுத்தியுள்ளார். ஜெனோசைட்டில் வரும் முதல் பாதி சொல்லான "ஜெனொஸ்" என்பது கிரேக்கச் சொல் ஆகும், அது "இனம்" அல்லது பழங்குடி என்ற பொருள் தருகிறது. "சைட்" எனப்படும் இலத்தின் சொல் "கொல்வதற்கு" என்ற பொருள் தருகிறது, இந்த இரண்டும் சேர்ந்தே "ஜெனொசைட்" என்ற வார்த்தை உருவானது.

யூத இனப்படுகொலையின் போது தனது சகோதரன் தவிர குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் இழந்த ரஃபேல், இனப்படுகொலை சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றமாக இனங்காணப்பட வேண்டும் என பிரச்சாரங்களை முன்னெடுத்துவந்தார். இதனைஅடுத்து1948 டிசம்பரில் இனப்படுகொலை குறித்த ஐ.நா தீர்மானத்தில் இது உள்வாங்கப்பட்டு பின்னர் 1951 ஜனவரியில் நடைமுறைக்கு வந்தது. ஒரு இனக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது குழுவின் உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான தீங்கினை ஏற்படுத்துவது இனப் படுகொலையாகக் கருதப்படுகிறது. அந்த இனக் குழுவில் புதிதாகப் பிறப்புக்களைத் தடுக்கும் நோக்கில் செயற்படுவது, குழந்தைகளை வலுக்கட்டாயமாக வேறொரு இனக்குழுவுடன் சேர்ப்பது, ஒரு தேசிய இனத்தை அல்லது சமய குழுவை முழுதாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் இனப்படுகொலை என ஐ.நா தீர்மானத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக, தடுப்பு நடவடிக்கைகள் Responsibility to Protect எனும் சர்வதேச கோட்பாட்டுக்கு அடித்தளமாக அமைகின்றன. 2005ன் உலக உச்சி மாநாட்டில் (2005 World Summit), உறுப்பு நாடுகள் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், இன அழிப்பு மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் அவற்றின் தூண்டுதலிலிருந்து தங்கள் மக்களை பாதுகாப்பதற்கு உறுதி பூண்டன. குறிப்பாக, இப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாடுகளுக்கு உதவி தேவைப்படும் போது, சர்வதேச சமூகம் அவர்களுக்கு உதவத் தயாராக இருக்க வேண்டும் என்றும் இதுபோன்ற குற்றங்களிலிருந்து தங்கள் மக்களைப் பாதுகாக்க அரசாங்கங்கள் தவறினால், ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்திற்கு அமைவாக, சர்வதேச சமூகம் கூட்டாகச் செயல்படவேண்டும் என்றும் இக் கோட்பாட்டின் ஊடாக நாடுகள் உறுதிஎடுத்துக் கொண்டன. இது சர்வதேச சட்டத்திலும் இனப்படுகொலை உடன்படிக்கையிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு, யுத்தக் குற்றங்கள், இனப்படுகொலை போன்ற வற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்புத் தொடர்பாக 2005 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை பொதுச்சபை தீர்மானங்களின் பந்திகள், 138 மற்றும் 139 ஆகிய இரண்டும் எடுத்துக் கூறுகின்றன. இப்பந்திகள் இரண்டும் 2006 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 1674 ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலம் "ஆயுத மோதல்களின் போது பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பாதுகாப்புச் சபைக்கு உள்ளது" எனத் திருத்தப்பட்டது.

இதன் பின்னர் இனப்படுகொலை என்பதற்கான வரைவிலக்கணத்தை 2008 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை "பாலியல் வன்முறை, பாலியல் ரீதியான ஏனைய வன்முறைகள் என்பனவும் யுத்தக் குற்றங்களாகவும், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களாகவும் கருதப்படும் என 1820 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

ஆர்மேனியன் இனப்படுகொலை (Armenian Genocide), கிரேக்க இனப்படுகொலை, பெரும் இனஅழிப்பு (2ஆம் உலகப் போரில் யூதர் இனப்படுகொலை) Holodomor இனப்படுகொலை, கம்போடியா இனப்படுகொலை, Communist genocide, ருவாண்டா இனப்படுகொலை, போசுனியன் இனப்படுகொலை, குர்து மக்கள் இனப்படுகொலை, தார்ஃபூர் போர் இனப்படுகொலை போன்ற பல இனப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. இந்த வரிசையில் உலகில் 2008ஆம் ஆண்டிற்குப் பின் நடந்த மாபெரும் இனப் படுகொலையாக ஈழத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.

இனப்படுகொலை என்பது ஆழ்ந்த வரலாற்று உள்ளடக்கத்தில் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தையாகும். இதற்கு நிகரான மட்டத்தில் கொடூரக் குற்றச்சாட்டு எதுவும் இருக்காது. நாஜிக்களால் மேற்கொள்ளப்பட்ட யூதர்களுக்கு எதிரான நடவடிக்கை மட்டுமே கடந்த நூற்றாண்டில் நடந்த இன அழிப்பு என சிலர் கூறுகின்றனர். ஆனால், 1948ஆம் ஆண்டுத் தீர்மானத்தின்படி, குறைந்தது மூன்று இன அழிப்பு சம்பவங்கள் நடந்திருப்பதாக வேறு சிலர் கணக்கிடுகின்றனர்.

முதலாவதாக, 1915க்கும் 1920க்கும் இடையில், ஒட்டோமான் துருக்கியர்களால் ஆர்மீனியர்கள் பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்பட்டது. அதன் பிறகு, நாஜிக்களால் 60 லட்சம் யூதர்கள் கொல்லப்பட்டது. மூன்றாவதாக, ருவாண்டாவில் 1994ல் டுட்ஸி, ஹூடு இனத்தைச் சேர்ந்த 8 லட்சம் பேர் கொல்லப்பட்டது. இவைதவிர, 1995ல் போஸ்னியாவின் ஸ்ரெப்ரெனீட்சாவில் நடந்தது இன அழிப்பு என யுகோஸ்லோவியாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கூறியிருக்கிறது. இதுபோக, 1932-33ல் உக்ரைனில் சோவியத் ஒன்றியம் ஏற்படுத்திய செயற்கைப் பஞ்சம், 1975ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு, 1970களில் கம்போடியாவில் நடந்த க்மெர் ரூஜ் படுகொலைகளையும் சிலர் இனப்படுகொலையாக முன்வைக்கின்றனர்.

ஜெனோசைட் என்று கூறப்படும் இனப்படுகொலை என்பது தமிழர் வரலாற்றில் முக்கியமானதாக ஆகிவிட்டது. 1949ல் டி.எஸ்.சேனநாயக்க அரசாங்கத்தின் நேரடி மேற்பார்வையில் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள குடியேற்றம் கல் ஓயா, கந்தளாய், அல்லை என்கின்ற தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்களக் கிராமங்களாக்கியது. 1956 யூன் 5ம் திகதி முதலாவது தமிழினப் படுகொலை கல் ஓயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழான இங்கினியாகலவில் இடம்பெற்றது. இதில் 156 தமிழர் ஒரேநாளில் படுகொலை செய்யப்பட்டனர்.

1958ம் ஆண்டு தெற்கில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை சர்வதேசத்தின் வரலாற்றுப் பதிவுக்குச் சென்றது. மே மாதம் 24ம் திகதி முதல் 26ம் திகதி வரை வவுனியாவில் தமிழரசுக் கட்சி நடத்திய மாநாட்டை ஒட்டியதாக இந்தப் படுகொலைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டது. அவசரகாலச் சட்டத்தையோ ஊரடங்குச் சட்டத்தையோ பிறப்பிக்க விரும்பாத அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க. 1977, 1979, 1981ஆம் ஆண்டுகளிலும் தமிழர் படுகொலை ஆங்காங்கு இடம்பெற்றது. 1977ல் முன் னூறுக்கும் மேற்பட்ட தமிழர் 24 மணிநேரத்தில் கொலையுண்டது பதிவில் உள்ளது. இது ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றது. இதே ஆண்டு யூன் முதலாம் திகதிதான் யாழ்ப்பாணப் பொது நூலகம் அமைச்சர்கள் மேற்பார்வையில் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. இலங்கையில் தங்களுக்கு உரிமைகள் கிடைக்காமல் பல காலம் அமைதி வழியில் போராடி, அதனால் பல வன்முறைகளை சந்தித்து, இறுதியில் விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

1983ஆம் ஆண்டு தமிழினப் படுகொலை முன்பு நடந்ததை விட மோசமானது. திட்டமிட்டு தேர்தல் இடாப்பைக் கைகளில் ஏந்தியவாறு, ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு வீதிகளையும் வீடுகளையும் அடையாளமிட்டு தமிழர் கொல்லப்பட்டனர். மண்ணையும் மக்களையும் காப்பாற்ற, ஆயுதங்களை ஆயுதங்களால் சந்திக்க வைத்த விடுதலை போராட்டம், 2009 மே மாதம் உறைநிலைகாணும் வரை இலங்கையில் இன ஒடுக்குதல் காரணமாகச் சுதந்திரத்திற்கு பிந்தைய வரலாறு முழுவதும் ஈழத் தமிழ் மக்கள் பல்வேறு மனித உரிமை மீறல்களைச் சந்தித்தார்கள். அவற்றுக்கான நீதியை நிலைநாட்ட சர்வதேச நாடுகள் மறுத்தமையின் வெளிப்பாடாக அதன் உச்ச நடவடிக்கையாக 2007ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் முள்ளிவாய்க்காலில் 1,46,679 தமிழர்கள் சிங்கள இனவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கை நீண்ட மனிதப் புதைகுழிகளின் வரலாறு தமிழ் இன அழிப்பின் சாட்சியங்களைக்கொண்ட நாடு. இலங்கையின் மனித புதைகுழிகள் சம்பந்தமான வரலாறு பல ஆண்டுகளைக் கொண்டிருந்தாலும் 1971 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அதன் பட்டியல் நீண்டு செல்கிறது. 1983ஆம் ஆண்டு முதல் 2009 வரை சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரத்திற்கும் (1,40,000) மேற்பட்டோர் காணாமல் போயிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமை ஆணையத்திடம் முறையிடப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் உடலங்களைக் கொண்ட பாரிய மனித புதைகுழிகள் ஆயிரக்கணக்கில் நாடு முழுவதும் உள்ளன.

2007ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையில் 40,000க்கும் அதிகமானோர் இலங்கை இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்டனர். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் பலர் சித்திரவதை செய்யப்பட்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட காணொளிகள், நிழல் படங்களையும் ஊடகங்கள் வாயிலாக காண முடிகின்றது. இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த பலர் இராணுவம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் வகையிலான நிழல் படங்களையும் காணமுடிகிறது.

2009 மே 18ஆம் நாள், முல்லைத்தீவு செல்வபுரத்தில், இலங்கை அரச படையினரிடம் சரணடைந்த 800க்கும் அதிகமானவர்கள் பேருந்துகளில் இராணுவத்தினரால் ஏற்றிச் செல்லப்பட்டார்கள். அவர்கள் எங்கே? இராணுவத்தின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டவர்கள், வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் மற்றும் நிராயுதபாணிகளாய் இராணுவத்திடம் சரணடைந்து பேருந்துகளில் ஏற்றும் போதும் அவர்களை கொண்டு செல்லும் போதும் பார்த்த முதலாம், இரண்டாம் சாட்சிகள் வாழும் சாட்சிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை தெரியவில்லை.

பௌத்த சிங்கள பேரினவாத அரசு மற்றும் அதன் படைகள் திட்டமிட்டும், பரந்தளவிலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை நாட்டின் பல பாகங்களிலும் நடந்தேறி உள்ளது. குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்ட மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப்பணிகள் வெளிகொண்டு வருகின்றன. புதைகுழிகளின் உண்மை நிலை, விரைவில் நாட்டுக்கு அம்பலமாகுவது திண்ணம். படுகொலை செய்யப்பட்டவர்கள் யார்?, அவர்கள் எங்கு படுகொலை செய்யப்பட்டார்கள், எவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்கள், அவர்களைக் கொலை செய்தவர்கள் யார் என்ற அனைத்து விடயங்களும் தெரிந்தும் ஒன்றும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றோம்.

தொடரும்...

**நிலவன்**

# விளையாட்டுச் செய்திகள்

## மீண்டும் சுரேஷ் ரெய்னா – சென்னை ரசிகர்கள் உற்சாகம்



சின்ன தல என ரசிகர்களால் அழைக்கப்படும் சுரேஷ் ரெய்னா சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு மீண்டும் திரும்ப இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலக கோப்பை தொடர் நிறைவடைந்து இந்திய ரசிகர்கள் அனைவரும் 2024ம் ஆண்டுக்கான ஐபிஎல் தொடர் மீது கவனம் செலுத்த தொடங்கியுள்ளனர்.

சுமார் 16.25 கோடி ரூபாய்க்கு சென்னை அணியால் எடுக்கப்பட்ட பென்ஸ்டோக்ஸ் அடுத்தாண்டு ஐபிஎல் தொடரில் இருந்து விலகியுள்ளார். அதே சமயத்தில் நட்சத்திர வீரர் சுரேஷ் ரெய்னாவை சிஎஸ்கே அணி உட்பட எந்த அணியும் கடந்த ஏலத்தில் எடுக்காத நிலையில். அவர் தொடர்ந்து லெஜண்ட் கிரிக்கெட்டில் கலந்து கொண்டு கலக்கி வருகிறார்.

இந்நிலையில், சமிபத்தில் சிஎஸ்கே கேப்டன் தோனி மற்றும் அவரது மனைவி ஷாக்சியை சுரேஷ் ரெய்னா சந்தித்தார். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி சென்னை ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த நிலையில் சிஎஸ்கே அணியில் திரும்பி வருவதற்கான பணிகளை ரெய்னா தோனியை சந்தித்து எடுத்திருப்பதாக கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஒருவேளை வீரராக இல்லை என்றாலும் பிராவோ உள்ளிட்ட வீரர்கள் போல் ரெய்னாவும் பயிற்சியாளராக கூட அணிக்கு திரும்ப வாய்ப்பு இருக்கிறது என ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

## கொந்தளித்த தென் ஆபிரிக்க கேப்டன்



தனது கேப்டன்சி குறித்து எழுந்த விமர்சனங்களுக்கு தென் ஆபிரிக்க கேப்டன் டெம்பா பவுமா பதிலடி கொடுத்துள்ளார்.

2023 உலகக்கோப்பை தொடரில் தென் ஆபிரிக்க அணி அரையிறுதியில் தோல்வியடைந்து வெளியேறியது. இதனால் தென் ஆபிரிக்க அணி மீது விமர்சனங்கள் எழுந்தன.

இதற்கு முன்பாகவே டெம்பா பவுமாவின் தலைமை கடுமையாக விளாசப்பட்டது. இந்த நிலையில் பவுமா தன் மீதான விமர்சனங்களுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

அவர், 'நான் ஆரம்பத்தில் இருந்தே சொன்னேன் "டெம்பா, நீங்கள் கேப்டன் பதவிக்கு சரியான ஆள் இல்லை" என்று கூறினால், நான் மகிழ்ச்சியுடன் விலகிச் செல்வேன். 2020ஆம் ஆண்டில் இருந்து இவர்களுடன் தான் ஒன்றாக இருக்கிறோம். நாங்கள் ஒருவரையொருவர் நன்றாக அறிவோம். நாங்கள் எதற்காக விளையாடுகிறோம் என்பது எங்களுக்குத் தெரியும். நான் ட்விட்டரிலோ அல்லது பேஸ்புக்கிலோ இருப்பவர் அல்ல' என்றார்.

மேலும் அவர் கூறுகையில், 'ஆமாம், நான் 100 சதவீதம் இல்லை தான், ஆனால் தொழில்முறை கிரிக்கெட் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரிந்தால், தோழர்களே எப்போதும் 100 சதவீத கிரிக்கெட் விளையாட மாட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நான் நாட்டிற்காக உடைந்த விரல்களுடன் விளையாடி நன்றாக செய்தேன்.

மக்கள் ஒருபோதும் நான் இடுப்பு காயத்துடன் ஒரு தொடரில் விளையாடி நன்றாக விளையாடினேன் என்று கேள்வி எழுப்பப்பட்டது. எனவே, போட்டியில் இருந்து வெளியேறியதற்கு காரணம் ஒரு சாக்காகப் பயன்படுத்தப்படுவது பைத்தியக்காரத்தனமானது என்பதை மரியாதையுடன் கூறுகிறேன்' என தெரிவித்துள்ளார்.

## கனேடிய கிரிக்கெட்டருக்கு ஐசிசி தடை

பெண்ணாக மாறிய அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டேனியில்லே மெக்கெஹெயுக்கு சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் விளையாட ஐசிசி தடை விதித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் பிரிஸ் பேனைச் சேர்ந்தவர் 29 வயதாகும் டேனியில்லே மெக்கெஹெய் (Danielle McGahey). திருநங்கையாக மாறிய இவர் கனேடிய தேசிய மகளிர் கிரிக்கெட் அணியில் விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் டேனியில்லேவுக்கு சர்வதேச கிரிக்கெட்டில் விளையாட ஐசிசி தடை விதித்துள்ளது.

ஆணுக்குரிய தன்மை கொண்ட ஒருவர் ஹார்மோன் சிகிச்சை மூலம் பெண்ணாக மாறினால், அவர் சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் விளையாட அனுமதிக்கப்பட மாட்டார் என ஐசிசி அறிவித்துள்ளது.



இதுதொடர்பாக மேலும் விளக்கம் அளித்த ஐசிசி, 'புதிய விதிமுறையின்படி சர்வதேச பெண்கள் கிரிக்கெட்டின் மாண்பையும், நேர்மையாகவும், வீராங்கனைகளின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த விதி சர்வதேச போட்டிகளுக்கு மட்டுமே பொருந்தும். உள்ளூர் போட்டிகளுக்கு அந்நாடுகளின் பாலின வரையறை செயல்பாட்டில் இருக்கும்' என கூறியுள்ளது.

ஐசிசியின் இந்த அறிவிப்பினால் சர்வதேச கிரிக்கெட்டில் பங்கேற்ற முதல் திருநங்கையான டேனியில்லே மெக்கெஹெய், இனி சர்வதேச மகளிர் பெண்கள் கிரிக்கெட்டில் விளையாட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது

## புதிய விதி – ICC அதிரடி முடிவு

ஒருநாள் மற்றும் டி20 சர்வதேச கிரிக்கெட்டில் Stop Clock என்ற புதிய விதியை ஐசிசி அறிவித்துள்ளது.

ஆடவர் ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் பந்துவீச்சாளர் அடுத்த ஓவரை வீச 60 வினாடிகளுக்கு மேல் எடுத்துக்கொண்டால் அபராதம் விதிக்கப்படும் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) தெரிவித்துள்ளது.

இந்த விதி முதலில் சோதனையாகப் பயன்படுத்தப்படும். நடைபெற்ற ஐசிசி வாரியாக கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

டிசம்பர் 2023 முதல் ஏப்ரல் 2024 வரை ஆண்கள் ஒருநாள் மற்றும் டி20 சர்வதேச கிரிக்கெட்டில் சோதனை அடிப்படையில் இந்த 'stop clock' விதிமுறை பயன்படுத்தப்படும் என தலைமை நிர்வாகிகள் குழு ஒப்புக்கொண்டதாக ஐசிசி அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த கடிகாரம் ஓவர்களுக்கு இடையில் எடுக்கும் நேரத்தை கண்காணிக்க பயன்படுத்தப்படும்.

அறிக்கையின்படி முந்தைய ஓவரை முடித்து 60 வினாடிக்குள் அடுத்த ஓவரை வீச தயாராக இல்லை என்றால். இன்னிங்ஸில் மூன்றாவது முறையாக அவ்வாறு செய்யும்போது. 5 ஓட்டங்கள் அபராதம் விதிக்கப்படும்.

## உலகக்கிண்ணத் தொடரை இழக்கும் இலங்கை

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் இடம்பெறவுள்ள ஐசிசி 19 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெட் இணையத்தளமான கிரிக்பஸ் இதனை தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள நிர்வாக சிக்கல்கள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கிரிக்பஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் பேரவையின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டு உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச கிரிக்கட் பேரவையின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இக் கூட்டத்தில் இலங்கையின் கிரிக்கெட் தடை தொடர்பில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



# உலக வலம்

## வேலை நிறுத்தத்தில் குதித்துள்ள அரசாங்க ஊழியர்கள்

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் அரசாங்க ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் குதித்தனர்.

கல்வி மற்றும் சுகாதாரத்துறையைச் சேர்ந்த ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சில தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்து இந்தப் போராட்டத்தை ஆரம்பித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சங்கங்கள் அரசாங் கத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளன. அரசாங்கம், 10.3வீத சம்பள அதிகரிப்பினை ஐந்து ஆண்டுகளில் வழங்குவதற்கு



உறுதியளித்துள்ளது.

மேலும் அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு தடவை ஆயிரம் டொலர்கள் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது. எனினும் இந்த முன்மொழிவுகளை தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன.

## அதிர்ச்சியில் தென்கொரியா



அமெரிக்கா, தென்கொரியா இணைந்து பல்வேறு தடைகள் விதித்த போதிலும், வடகொரிய அதற்கு கட்டுப்படாமல் தொடர்ந்து அதன் வேலையை செய்து வருகிறது. ஏவுகணைகளை அடிக்கடி சோதனை செய்து பார்ப்பதை வடகொரிய வழக்கமாக கொண்டுள்ளது.

உச்சக்கட்டமாக உளவு பார்க்கும் செயற்கைக்கோளை தயாரித்து அதை விண்ணில் செலுத்துவோம் என அறிவித்தது. இந்த உளவு செயற்கைக்கோள் கொரிய தீபகற்பம், ஜப்பான் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ராணுவ நடவடிக்கையை துல்லியமாக கண்டறியும். இதனால் தங்களது பாதுகாப்பை அதிகரித்து கொள்ள முடியும் என வடகொரிய தெரிவித்து வந்தது. ஆனால், சில மாதங்களுக்கு முன் உளவு பார்க்கும் செயற்கைக்கோளை செலுத்தியது.

ஆனால், முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது. செயற்கைக்கோளின் பாகங்களை சேகரித்த தென்கொரியா, அது உளவு பார்க்கும் திறனற்றது எனத் தெரிவித்தது. ஆனால், வடகொரியா தனது முயற்சியை கைவிடாமல், 2-வது முறையாக முயற்சி செய்தது. 2-வது முறையாகவும் தோல்வியடைந்தது. அப்போதும் வடகொரியா மனம் தளறவில்லை. தோல்விக்கான காரணங்களை கண்டறிந்து அதை சரி செய்தது.

கடந்த இரண்டு நாட்களாக, நாங்கள் உளவு செயற்கைக்கோளை செலுத்த இருக்கிறோம் என ஜப்பானுக்கு தகவல் தெரிவித்தது. இதனால், தென்கொரியா தங்களது கவலையை தெரிவித்தது. ஜப்பான் எல்லையில் உள்ள கடற்பகுதியில்தான் வடகொரிய ஏவுகணை சோதனை நடத்தும் என தகவல் தெரிவித்தது.

இந்த நிலையில், உளவு செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டு, சுற்றுப்பாதையில் நுழைந்ததாக வடகொரியா தெரிவித்துள்ளது.

ஜப்பான் உறுதிப்படுத்தாத நிலையில், நாங்கள் அதுகுறித்து மதிப்பீடு செய்து வருகிறோம் என பென்டகன் தெரிவித்துள்ளது. வடகொரியாவின் செயல் ஐ.நா தீர்மானத்தை மீறியது மட்டுமல்லாமல், நமது நாட்டின் பாதுகாப்பிற்கான பயங்கரமான ஆத்திரமூட்டல் செயல் என தென்கொரியாவின் தேசிய பாதுகாப்பு கொள்கைக்கான துணை மந்திரி தெரிவித்துள்ளார். மேலும், 2018-ம் ஆண்டு போடப்பட்ட பதற்றம் - குறைப்பு ஒப்பந்தத்தின் ஒரு பகுதி சஸ்பெண்ட் செய்யப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் அமெரிக்க அதிபரின் மனைவி காலமானார்

அமெரிக்காவின் அதிபராக 1977 முதல் 1981 வரை செயற்பட்ட ஜிம்மி கார்ட்டரின் மனைவி ரோஸலின் கார்ட்டர்.

இதனிடையே, 96 வயதான ரோஸலின் கார்ட்டர் உடல்நலக்குறைவு காரணமாக ஜோர்ஜியாவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ரோஸலின் கார்ட்டர் கடந்த (19.11.2023) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ரோஸலின் கார்ட்டர் மறைவிற்கு பல்வேறு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.




## பில்கேட்ஸின் அதிரடி அறிவிப்பு



மைக்ரோசொப்ட் நிறுவனரான பில் கேட்ஸ் தொழில்நுட்பம் மனிதர்களுக்கு மாற்றாக அமையாது என்ற நம்பிக்கை கொண்டவர் என நம்மில் பலருக்கும் நிச்சயம் தெரிந்திருக்கும் ஆனாலும், அவர் தொழில்நுட்பத்தின் உதவியால் ஒருவர் வாரத்திற்கு மூன்று நாட்கள் வேலை செய்தாலே போதும் என்று கருத்து தெரிவித்து இருக்கிறார்.

தென் ஆபிரிக்காவை சேர்ந்த காமெடியனும், எழுத்தாளருமான டிரெவர் நோவாவுடனான பாட்காஸ்ட் நிகழ்ச்சியில் பேசிய போது பில் கேட்ஸ் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

68 வயதான பில் கேட்ஸ் ஏ.ஐ எனும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மனிதர்களின் வேலைவாய்ப்பை பறித்துவிடாது, ஆனால் வேலை பார்க்கும் முறையை முற்றிலுமாக மாற்றியமைத்துவிடும் என்று தெரிவித்துள்ளார். ஏ.ஐ தொழில்நுட்பம் நம் வாழ்க்கை எந்த அளவுக்கு நல்ல வகையில் மாற்றியமைக்கும் என்பது தொடர்பாகவும் அவர் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டிருந்தார்.

"மனிதர்கள் கடினமாக உழைக்க வேண்டும் என்ற நிலை மாறும். அப்படியான ஒரு சமூகத்தில் ஒருவர் வாரத்திற்கு மூன்று நாட்கள் மட்டும் வேலை பார்த்தாலே போதுமானதாக இருக்கும். அப்போது இயந்திரங்களே உணவு மற்றும் இதர வேலைகள் அனைத்தையும் பார்த்துக் கொள்ளும்," என்று அவர் தெரிவித்துள்ளார்.

## 61 தரமற்ற மருந்துகள் – மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம்

மருந்து உற்பத்தி நிறுவனங்கள், விற்பனையகங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 61 மருந்துகள் தரமற்றவை என கண்டறியப்பட்டதாக மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது. அவற்றில் பெரும்பாலானவை ஹிமாசலப் பிரதேசம், உத்தரகண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் தயாரிக்கப்பட்டவை.

நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து வகையான மருந்து - மாத்திரைகளும் மத்திய மற்றும் மாநில மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியங்கள் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன. அதேபோன்று போலி மருந்துகளும் கண்டறியப்பட்டு அதன்பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் மட்டும் 1,105 மருந்துகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் கிருமித் தொற்று, ஜீரண



மண்டல பாதிப்பு, வலி பாதிப்பு, காய்ச்சல், சளி, கல்சியம் குறைபாடு உள்ளிட்ட பாதிப்புகளுக்கு பயன்படுத்தப்படும் 61 மருந்துகள் தரமற்றவையாக இருந்தது கண்டறியப்பட்டது.

இதையடுத்து அதன் விபரங்களை மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு இணையப் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

## உரிய ஆவணங்களின்றி தங்கியிருந்த 04 லட்சம் அகதிகள் வெளியேற்றம்



உரிய ஆவணங்களின்றி தங்கள் நாட்டில் தங்கியிருந்த 4 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆப்கன் அகதிகள் அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இது குறித்து ஆப்கன் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபீஹுல்லா முஜாஹித் கூறியதாவது, தங்கள் நாட்டில் உரிய ஆவணங்கள் இல்லாமல் தங்கியிருக்கும் ஆப்கானிஸ்தான் நாட்டவர்களை பாகிஸ்தான் அரசு வெளியேற்றி வருகிறது. அந்த வகையில் ஆப்கானிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்தைத் தாண்டியுள்ளது என்றார் அவர்.

பாகிஸ்தான் அதிகாரிகள் கூறுகையில், சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் ஆப்கன் நாட்டவர்கள் அனைவரும் வெளியேற்றப்படும் வரை இதற்கான நடவடிக்கை தொடரும் என்று கூறினார்.

1979-89 காலகட்டத்தில் ஆப்கானிஸ்தானை சோவியத் யூனியன் ஆக்கிரமித்திருந்தபோது அங்கிருந்து ஏராளமான அகதிகள் பாகிஸ்தானில் தஞ்சமடைந்தனர். அதன் பிறகு நடைபெற்ற போர்களின் போதும் ஆப்கன் அகதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளித்து வந்தது.

எனினும், ஆப்கானிஸ் தானுடனான எல்லைப் பகுதியில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அந்த நாட்டு அகதிகள்தான் காரணம் என்று பாகிஸ்தான் அரசு குற்றஞ்சாட்டி வருகிறது. அதையடுத்து, உரிய ஆவணங்களின்றி பாகிஸ்தானில் தங்கியுள்ள சுமார் 17 லட்சம் ஆப்கானியர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# சாதனை படைத்த அகிலம் அக்கா

அண்மையில் பிலிப்பைன்ஸ் இல் நடைபெற்ற National Masters & Seniors Athletics போட்டியில் இலங்கையிலிருந்து கலந்துகொண்ட முள்ளியவளை, முல்லைத்தீவை சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகி (ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்) இரண்டு தங்கப் பதக்கங்களை பெற்று மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.









முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய், கொக்குளாய், கருநாட்டுக்கேணி பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த (21.11.2023) அன்று பிற்பகல் 2.30 மணியளவில் கொக்குதொடுவாய் சமூக அமைப்புக்கள், கொக்குத்தொடுவாய் மக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றபோது...

















முல்லைத்தீவு, முள்ளியவளை பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு 22.11.2023 காலை 11.30 மணியளவில் மாவீரர் பணிக்குழு தமிழ்த்தேசிய சமூக ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஞானதாஸ் யூட்சன் தலைமையில் இடம்பெற்றபோது...

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 26.11.2023 அன்று வெளியிடப்பட்டது.